10

# பல்கலைக்கழக விசாரணைக் கமிட்டி பெப். 13ல் யாழ்ப்பாணம் வரும்


Regd. as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 348
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 14 ஜூல்கஃ 18 செவ்வய்க்கிழமை [27-1-70]


## 80 பேர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும்

யாழ்ப்பாணம், செவ்

பல்கலைக்கழக விசாரணைக் கமிட்டி பெப்ரவரி மாதம் 13ம்தேதி யாழ்ப்பாணத் திற்கு வருகிறது. விசாரணைக் கமிட்டி உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ஏற்றதென கூறப்படும் காணிகளையும் கட்டடங்களையும் நேரில் பார்வையிடுவார்கள்.

பெப்ரவரி 13-ம் தேதி தொடர்ந்து நான்கு தினங்கள் பகிரங்க விசாரணை நடைபெறும்.

கமிட்டியின் தலைவரான பேராசிரியர் மலலசேகராவும் மற்றும் இரு அங்கத்தவர்களான திரு என் சின்னத்தம்பி திரு. எஸ். டபிள்யூ அதிகாரம் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருவார்கள்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் 4 நாட்களும் இவர்கள் 80 பேர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்வார்கள். இக்கமிட்டி முன்சாட்சியமளிக்க இதுவரை 150 பேர் விண்ணப்பித்துள்ளார்கள்,

விசாரணைக்கமிட்டி மார்ச் மாதம் 26-ம் தேதி திருக்கோணமலைக்குச் சென்று 3 தினங்கள் தங்குவார்கள். திருகோணமலையில் 30 பேர் சாட்சியமளிப்பார்கள

கமிட்டி மட்டக்களப்பிற்கு செல்வது பற்றி இன்னும் எவ்வித முடிவும் செய்யவில்லையெனத் தெரியவருகிறது.

# "வடமராட்சி வரை புகையிரத சேவையை விஸ்தரிக்கவும்"

## போக்கு வரத்து அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி, திங்கள்

"யாழ்ப்பாண நகரை உள்ளடங்கிய கரையோரப் பகுதிகளான வசாவிளான் இடைக்காடு, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வதிரி, மந்திகை, நெல்லியடி, பருத்தித்துறை, துன்னாலை முதலிய இடங்களிலுள்ள பொது மக்களுக்கு வசதி செய்யும் முகமாகக் காங்கேசன்துறையிலிருந்து வடமராட்சிக் கரையோரப் பகுதி ஊடாகக் கொடிகாமத் திற்குப் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும்".

இவ்வாறு கோரும் மகஜரொன்றை உடுப்பிட்டித் தமிழ் மன்றம் போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

மன்ற உபசெயலாளரான [illegible] பதாவது:

வடமராட்சிக் கரையோரப் பகுதியில் புகையிரத சேவை ஆரம்பித்தால் மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் குறைவதோடு, இப்பகுதிகளின் பொருள் வளத்தைப் பெருக்கவும் ஏதுவாக இருக்கும். சனத்தொகை அதிகமான இப்பகுதிகளில் புகையிரத சேவையை ஆரம்பிப்பதால் புகையிரத இலாகாவுக்கு அதிக வருமானம் கிடைக்கும் புகையிரதத் திற்காகக் கொடிகாமம் அல்லது யாழ்ப்பாணம் புகையிரத நிலையங்களுக்கும் அலையவேண்டிய அவசியம் இராது. வடமராட்சிப் பகுதியிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கானோர் புகையிரதப் பிரயாணம் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [illegible]ங்களின் இலகுவானபோக்குவரத்தில் இச்சேவை ஆரம்பித்தால் பெரும்பயன் அமையலாம். இதன் மூலம் சிறுகைத்தொழில் உற்பத்திப் பொருட்களை வறிய மக்களும் சுலபமாக வேறிடம் கொண்டு சென்று விற்பனை செய்யமுடியும்.

மேலும் திட்டமிடப்பட்டுள்ள பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கும், வல்லிபுரக் கோவில் கண்ணாடித் தொழிற்சாலைக்கும் புகையிரதசேவை இன்றியமையாத தேவையாக இருக்கும்.

வடமராட்சிக் கரையோரப் பகுதியூடாகப் புகையிரதசேவை ஆரம்பிப்பதால் [illegible] எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது".

இம் மகஜரில் [illegible]கள் [illegible]

## சன்ட்பத்தேசிங்

### உண்ணாவிரதம் ஆரம்பித்தார்

அமிர்தசரஸ், ஜன 26

அகாலி தலைவர் சன்ட் பதேசிங் தாம் முன்னர் அறிவித்ததுபோல் இன்று காலை பத்துமணியளவில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்,

சண்டிகார் நகரை பஞ்சாப்புக்கு கொடுக்கவேண்டுமென்று கோரி சன்ட் பத்தேசிங் உண்ணாவிரதம்மேற் கொள்கிறார்.

பெப்ரவரி 1-ம் திகதிக்கு முன் சண்டிகார்பஞ்சாபுக்கு சேராவிட்டால் தீக்குளித்து உயிரை மாய்க்கப்போவதாக சன்ட் தெரிவித்துள்ளார்,

உண்ணா விரதமிருப்பதும் தீக்குளிக்கப்போவதாக கூறுவதும் மிரட்டல் என்று கொள்ளக் கூடாதென்றும் இதுஒருமாதிரியானவேண்டுகோளகள என்றும் அதனை வற்புறுத்திக்கேட்டுக்கொளவதாகவே இது இருக்கும் என்றும் சன்ட் பத்தேசிங் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்குமுன் தெரிவித்தார்

பொற்கோவிலில் ஒரு கட்டிடத்தின் மீதுஅவர் அமர்ந்திருக்கிறார். பல்வேறு தலைவர்களும் அவரைப் போய் பார்த்தார்கள். சன்ட் உண்ணாவிரதம் இருக்கும் காலங்களில் உப்பு கலந்த சிறிது தண்ணீர்மட்டும் அருந்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உண்ணாவிரதமிருககுமுன் அவரை டாகடர்கள் பரிசோதித்தனர்.

## சிசுக்கொலை வழக்கில்

யாழ். மாவட்டத்தில்

## உள்ளூராட்சி மந்திரியின் நான்கு நாள் சுற்றுலா

### ஜனவரி29-ம் தேதிமுதல் நிகழ்ச்சி விபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இரண்டாவது தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இம் மாதம் 29-ம் திகதி உத்தியோக பூர்வமாக விஜயம்செய்கிறார். யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 நாட்கள் தங்கி, அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றார்.

அமைச்சரின் யாழ். மாவட்ட நிகழ்ச்சி நிரல் வருமாறு:

ஜனவரி 29: காலை 7-00 மணி- இலங்கை அரச விமானப் படை இரத்மலானை விமானத்திலிருந்து புறப்படல் 8-00 பலாலி விமான நிலையத்திற்கு வந்து சேரல். 8-15 மூதவை உறுப்பினர்கள் வடபகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பொதுமக்கள் அமைச்சரை வரவேற்றல். 8 20 அமைச்சருக்கு உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் பிராந்தியத் திணைக்களங்களின் தலைவர்களும் அறிமுகம் செய்து வைக்கப்படுதல் 8-45பலாலி விமான நிலையத்திலிருந் புறப்படல். 9-15 யாழ்ப் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வரும், பிரதி முதல்வரும் மாநகரசபை உறுப்பினர்களும் யாழ். நகரின் நுழைவாயிலில் அமைச்சரை வரவேற்றல் 9-40 சமய வழிபாட்டு வைபவத்திற்காக நாகவிகாரைக்கு வந்து சேர்தல். 9-50 அரசாங்க செயலகத்துக்கு வந்து சேர்தல் 10-00 யாழ்ப்பாண மாவட்ட மாகாநாடு. நண்பகல் 12-00 யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களால் அளிக்கப்படும் மத்தியான போசன விருந்து 1-30 அரசமாளி[illegible] கேசன்துறைக்குபுறப்படல். இரவு காங்கேசன்துறை அதிதி மனையில் தங்குவார்.

ஜனவரி 30-ம் திகதி: காலை 8 மணி காங்கசன்துறை அதிதி மனையிலிருந்து அமைச்சர் புறப்படல். 10-00 பூநகரிக்கு வந்துசேர்தல்பூநகரிகி சபை தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 11-00 பல்லவராயன்கட்டு கிராமசபைத் தலைவராலும், உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு 12-30 பல்லவராயன்கட்டுக் கிராம சபைத் தலைவராலும், உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் மத்தியான போசனவிருந்து.

பிற்பகல் 1-45 கச்சாய்க்குப் புறப்படல். 3-30 கச்சாய் கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 4-15 கைதடிக்குப் புறப்படல். 4-30 கைதடி கிராமசபைத் தலைவரையும் உறுப்பினரையும் சந்தித்தல், 5-00கோப்பாய் கிராம சபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிககப்படும் வரவேற்பு. 5-30 நெல்லியடிககுப் புறப்படல். 6 00 கரவெட்டியிலுள்ள அத்துளு நீர் வழங்கல் திட்டத்தைப் பார்வையிடல்.

## டெலிபோன் கட்டணம் கூடுதலாக அறவிடப்படுகிறதாம்

புலோலி, திங்கள்

பருத்தித்துறைப் பகுதியிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் டெலிபோன் வைத்திருப்பவர்கள் தங்களுக்கு அனுப்பப்படும் "டெலிபோன் பில்"களில் கூடுதலாகப் பணம் கோரப்பட்டுள்ளதாகப் புகார் செய்கின்றனர். ஆனல் தாம் வசூல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்ணா விரதமிருப்பதும் தீக்குளிக்கப்போவதாக கூறுவதும் மிரட்டல் என்று ...மிருக்குமுன் அவரை டாக்டர்கள் பரிசோதித்தனர்.

வேண்டும்''.

இவ்வாறு கோரும் மகஜரொன்றை உடுப்பிட்டித் தமிழ் மன்றம் போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

மன்ற உபசெயலாளரான திரு சி சத்தியேஸ்வரனால் அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேலும் குறிப்பிட்டிருப்... நிலையங்களுக்கும் அலையவேண்டிய அவசியம் இராது. வடமராட்சிப் பகுதியிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கானோர் புகையிரதப் பிரயாணம் செய்கின்றனர் ...து குறிப்பிடத்தக்கது. ...பிடித் துறைமுகமும், பருத்தித்துறைத் துறைமுக அபிவிருத்தி, பொருள் வள... இருக்கும்.

வடமராட்சிக் கரை...யாரப்பகுதி யூடாகப் புகையிரத சேவை ஆரம்பிப்பதால் பஸ்சேவை எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது''.

இம் மகஜரின் ...திகள் தமிழரசுக்கட்சித் த...ருக்கும் உப சபாநாயகர்கரும் உடுப்பிட்டி எம் பியுமான திரு மு சிவசிதம்பரத்திற்கும், தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பியுமான திரு ஜி ஜி. பொன்னம்பலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

...களிலும் டெலிபோன் வைத்திருப்பவர்கள் தங்களுக்கு அனுப்பப்படும் ''டெலிபோன் பில்'' களில் கூடுதலாகப் பணம் கோரப்பட்டுள்ளதாகப் புகார் செய்கின்றனர். ஆனால் தாம் வசூல் செய்யும் பணம் சரியான கணக்கின் அடிப்படையிலேயே தான் அறவிடப்படுகிறதென தந்திப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

# சிசுக்கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

வேலணை சிசுக்கொலை வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

சென்ற மாதம் அராலி கொட்டைக்காட்டைச் சேர்ந்த திருமதி அம்பிகாபதி அம்மாள் சண்முகலிங்கம், தனக்குப் பிறந்த சிசுவை வேலணையில் வைத்துக் கொலைசெய்தார் என்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தளைய சிங்கம் யோகநாதன் தமது தொகுப்புரையில் இவ்வழக்கு உயர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவதற்கான சாட்சியங்கள் இல்லையென்று கூறி, எதிரியை விடுதலை செய்யும்படி கோரினார்.

வழக்கறிஞரின் வாதத்தை ஏற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை நீதவான் திரு. ஜே. ஜே. எப் ஏ. டயஸ் எதிரியை விடுதலைசெய்தார்.

## ஆசிரியர் நியமிக்கும்படி சாவகச்சேரி எ. பி. கோரிக்கை

கொழும்பு, திங்கள்

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் பாடங்கள் படிப்பிக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதாக சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. என் நவரத்தினம், இன்று ஆட்சிமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

இந்த இடங்களை கல்வி அமைச்சு நிரப்பாவிட்டால் சம்பளம் இல்லாமலேயே படிப்பிப்பதற்கு பலர் தயாராக இருப்பதாகவும் அதற்கு கல்வி அமைச்சர் அனுமதி தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சம்பளம் இல்லாமல் படிப்பிக்க ஆசிரியர்களை நியமிப்பதனால் கல்வி அமைச்சுவுக்கு சில சிக்கல்கள் ஏற்படுமென்றும் விரைவில் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக கல்வி அமைச்சர் திரு இரிய கொல்லை பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## சுருட்டுத் தொழிலாளர் சங்க முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க முயற்சியின் பயனாக ஆயிரம் சுருட்டுக்கு 15 ரூபா கூலியாக வழங்குவதற்கு 80 சுருட்டு உற்பத்தியாளர்கள் சம்மதித்துள்ளதோடு, பதினைந்து ரூப வீதம் கூலியும் கொடுத்துள்ளார்களென அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

முற்குறிப்பிட்ட சங்கத்தின் தீர்மானத்திற்கு இணங்கத் தாமதித்த சுருட்டு உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் நேரடியாகச் சந்தித்துப் பேசியதனால் ஏனைய 40க்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் சம்பளம் வழங்கியுள்ளார்களென்றும் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவிக்கிறார்.

## இடமாற்றம்

கோட்டை, திங்கள்

திருகோணமலை புகையிரதப் பகுதி காரியாலயத்தை சேர்ந்த ஆர் சந்தான கோபாலன் தை மாதம் தொடக்கம் மருதானை பிரதம கணக்காளர் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## 'பாலம் அமைத்துத் தருக'

திருக்கோணமலை, திங்கள்

அல்லை - கந்தளாய் வீதியைக் குறுக்கீடு செய்யும் ஆற்றை மேவிப் பாலம் போட்டுத் தரும்படி சேருவில் கிராம சேவகர் திரு. பி. எச். சந்திரசேன உள்ளூர் ஆட்சி அமைச்சைக் கேட்டிருக்கிறார்.

பூநகரியில்

# அமோக வரவேற்பு அளிக்க ஏற்பாடு

பூநகரி, திங்கள்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இம் மாதம் 30-ம் திகதி பூநகரி பகுதிக்கு விஜயம் செய்கின்றார். இவருக்கு பூநகரிகிராமசபை, பல்லவராயன்கட்டு கிராமசபை ஆகியன பிரமாண்ட வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

இதற்கான வரவேற்புப் பந்தல்கள் இப்பொழுதே போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டுவருகின்றது.

30-ம்திகதி காலை 10 மணியளவில் விஜயம் செய்யும் அமைச்சர் அவர்களை பூநகரி கிராமசபைத்தலைவர் திரு. வி. வல்லிபுரம் மாலை சூட்டி வரவேற்று ஊர்வலமாக கிராமசபை மண்டபத்திற்கு அழைத்துச் செல்வார். காலை 10-05 மணிக்கு சபை உறுப்பினர்களையும் பிரமுகர்களையும் தலைவர், மந்திரிக்கு அறிமுகம் செய்து வைப்பார் காலை 10-15 மணிக்கு பூநகரி படித்தஇளைஞர் முன்னேற்ற சங்கத்தால் அமைக்கப்பட்ட நூல்நிலையத்தை மந்திரி திறந்து வைப்பார். இதன் பின் உள்ளூராட்சி வாரக் கொண்டாட்ட நினைவுச்சின்னமாக நிறுவிய சித்த ஆயுள்வேத வைத்தியசாலை துணை நிறுவனத்தை திறந்துவைப்பார்.

கிராமசபைத்தலைவர் திரு ப. வல்லிபுரம் முன்னுரை வழங்கி வரவேற்புப் பத்திரத்தை வாசித்து வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளிப் பேழையினுள் வைத்து மந்திரியிடம் கையளிப்பார்

பாடசாலை மாணவர் கதம்ப நிகழ்ச்சியை தொடர்ந்து மந்திரி பிரேமா உரை ஆற்றுவதோடு இலவச பாடபுத்தகங்களை பாடசாலை அதிபரிடம் ஒப்படைப்பார். இதன் பின் தேநீர் விருந்து நடைபெறும்.

## கனடாவில் பிரிட்டிஷ் பிரதமர்

ஒட்டாவா, ஜன. 26

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹறோல்ட் வில்சன் அமெரிக்கா செல்லும் வழியில் ஒட்டாவா வந்து சேர்ந்துள்ளார். கனடா பிரதமர் திரு. தியூ...வுடன் ஆலோசனைகள் கலந்தபின்னர் அவர் அமெரிக்கா சென்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டையும், அமெரிக்க அதிபர் நிக்ஸனையும் சந்தித்துபேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

## கருணாநிதி சுகவீனம்

சென்னை, ஜன. 26

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு உடல் நலமின்மையால் இன்று எது வித பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள வேண்டாமென டாக்டர்கள் சிபார்சு செய்துள்ளனர்.

## 25 சதமாக விற்க உத்தரவு

கோட்டை, திங்கள்

விற்பனை இலாகா நாட்டிலுள்ள தனது விற்பனை நிலையங்கள் யாவற்றிற்கும் தேங்காய் ஒன்று 25 சதமாக மக்களுக்கு விற்கும்படி உத்தரவிட்டுள்ளது.

பொதுச்சந்தைகளில் திடீரெனத்தேங்காய் விலையில் ஏற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## குழந்தை பரிதாப மரணம்

புலோலி, திங்கள்

தும்பளையைச் சேர்ந்த நெல்லண்டை வாசியான சலவைத் தொழிலாளியான வேலன் வீரனின் 4 வயது ஆண் குழந்தை கிணற்றில் இறந்து கிடக்கக்காணப்பட்டது. இம்மரணத்தையிட்டு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரண விசாரணை நடாத்தினார்.

மரண விசாரணையில் பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## பட்டப்பகலில் தாலிக்கொடி களவு

மாவிட்டபுரம், திங்கள்

வீதியில் சென்ற இளம் பெண் ஒருவரின் கழுத்திலிருந்து பட்டப்பகலில் தாலிக்கொடியைக் களவாடிய இனந்தெரியாத நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிசார் தேடுகின்றனர்.

வல்வெட்டியைச் சேர்ந்த தமிழ்வாலிபர் ஒருவரின் மனைவியான சிங்களப் பெண்ணே தாலிக்கொடியை இழந்த பெண்ணுவர். தாலிக்கொடியின் பெறுமதி சுமார் 1000 ரூபாவாம்

...பாண மாவட்ட மாகாநாடு. நண்பகல் 12-00 யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களால் அளிக்கப்படும் மத்தியான போசன விருந்து 1-30 அரசமாளிகைக்கு புறப்படல். 3-00 மானிப்பாய்க்குப் புறப்படல். 3-15 மானிப்பாய் பட்டினசபை தலைவராலும், உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 3-45 மானிப்பாய் கிராமசபைக்கு புறப்படல். 4-00 மானிப்பாய் கிராமசபை புதிய அலுவலக கட்டிடத்திற்கு அத்திவாரக்கல் நாட்டல். 4-30 சுன்னாகத்திற்கு புறப்படல் 5-00 சுன்னாகம் பட்டினசபை மாதிரி சந்தைக்கு அத்திவாரக் கல் நாட்டல். 5-45 யாழ்ப்பாண நகரமண்டபத்திற்கு புறப்படல். 6-45 யாழ்ப்பாண மாநகரசபையால் அளிக்கப்படும் வரவேற்பு. 8-00 யாழ்ப்பாண வாடிவீட்டில் மாநகர சபை முதல்வராலும், உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் இராப்போசனவிருந்து இரவு 9-30 மணி காங்கேசன்துறைக்குப் புறப்படல். ... சபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 5-30 நெல்லியடிக்குப் புறப்படல். 6 00 கரவெட்டியிலுள்ள அத்துளு நீர் வழங்கல் திட்டத்தைப் பார்வையிடல். 7-30 நெல்லியடியில் பொது வரவேற்பும் இராப் போசன விருந்தும். இரவு 9-00 காங்கேசன்துறைக்குப் புறப்படல். இரவு காங்கேசன் துறை அதிதிமனையில் தங்குவார்.

ஜனவரி 31: காலை 8-00 காங்கேசன்துறை அதிதி மனையில் இருந்து புறப்படல். 9-00 வேலணைக்கு வந்துசேரல். வேலணை கிராமசபைத் தலைவராலும், உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 10-00 ஊர்காவற்றுறைக்குப் புறப்படல். 10-30 ஊர்காவற்றுரை பட்டினசபைத் தலைவரையும், உறுப்பினர்களையும் சந்தித்தல். நண்பகல் 12-00 ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் மத்தியான போசனவிருந்து,

(4-ம் பக்கம் பார்க்க)

## 20 நாட்கள் அனாதரவாகக் கிடந்தசடலம்
### தற்கொலை எனத் தீர்ப்பு

திருகோணமலை, திங்கள்

நாலு பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலம் வயல் வெளியொன்றில் அநாதையாகக்கிடக்கக் காணப்பட்டது. 20 நாட்களின்பின் இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சேனையூரைச்சேர்ந்த இந்நபரின் சடலம் கணங்குடா வயல்வெளியில் காணப்பட்டது. சடலத்தினருகில் நச்சுத்திராவகப்போத்தல் ஒன்றும் கிடந்தது.

மரணவிசாரணையின்போது இறந்தவரின்மனைவி சாட்சியமளிக்கையில் இறந்தவர் கடைசியாகச் சாப்பிட்டுவிட்டுப் போகும்பொழுது இதுதான் எனது கடைசிச் சாப்பாடு என்று சொன்னதாகவும்தான் நாயை அழைத்து, உனக்கு நான் வைக்கும் கடைசிச்சாப்பாடு இது தான்' என்று சொல்லி அதற்குச் சோறு வைத்துவிட்டுச் சென்றதாகவும், அவ்வாறு சென்றவர் 20 நாட்களாகியும் திரும்பவில்லையென்றும் தெரிவித்தார்''

மரணவிசாரணைசெய்த சடுதி மரணவிசாரணை அதிகாரி திரு எம் கனகசபை தற்கொலை என தீர்ப்பளித்தார்.

சுருட்டுத் தொழிலாளர் சம்பளம்

## 15 ரூபாவாக அதிகரிக்க உற்பத்தியாளர் சங்கம் முடிவு

மாவிட்டபுரம், திங்கள்

சுருட்டுத் தொழிலாளரின் சம்பளத்தை அதிகரிப்பதென சுருட்டு உற்பத்தியாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

திரு. கு. பிரமானந்தா தலைமையில் இன்று நடைபெற்ற சுருட்டு உற்பத்தியாளர் சங்கக் கூட்டத்தில் பலமணி நேரம் ஆராயப்பட்டபின், இம்முடிவு செய்யப்பட்டது. தற்போது வழங்கும் ஆயிரம் சுருட்டுக்கான கூலியை 15 ரூபாவாக உயர்த்துவதெனச் சங்கம் தீர்மானித்தது. சங்கக் காரியதரிசி திரு. எஸ். ஏ. ரி. வடிவேலு சம்பள அதிகரிப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

தனது பதவி உயர்வு உரிமைகளைத் தர மறுத்ததாக கூறி திருமலை நகரசபைத் தலைவருக்கு எதிராக மத்தியூஸ் என்னும் ஊழியர் நகரசபை முன்றலில் சத்தியாக்கிரகம் இருந்துவருகின்றார்.

"பொதுத்தேர்தல் அன்று

# தனிப்பட்ட வாகனங்கள் அனுமதிக்கப்படவேண்டும்''
## அரசாங்கக்கட்சி எம். பி. க்கள் கேட்கிறார்கள்

கொழும்பு, திங்கள்

பொதுத்தேர்தல் நடைபெறும் தினத்தில் தனிப்பட்ட வாகனங்களையும் அனுமதிக்க வேண்டுமென்று அரசாங்க கட்சியைச் சேர்ந்த எம் பிக்கள் சிலர் கோரியுள்ளனர்

இ. போ ச, பஸ்கள் ரயில் ஆகியன தவிர்ந்த மற்றைய எந்த வாகனங்களும் தேர்தல் தினத்தில் அனுமதிக்க கூடாதென்ற எதிர்க்கட்சியினரின் தேர்தல் சட்ட திருத்தத்தை முன்னர் ஏற்றுக்கொண்ட அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிலர் இன்று எதிர்ப்புத் தெரிவித்தனர்

அரசாங்கக்கட்சி ஆட்சிமன்றக்குழு இன்று கூடி தேர்தல்பற்றி ஆராய்ந்தது. அப்போது எம், பிக்கள் சிலர் தேர்தல் அன்று தனிப்பட்ட வாகனங்கள் அனுமதிக்கப்படவேண்டுமென்று கோரினர்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்க ஊழியர்கள் இ. போ. ச. பஸ் சேவையை அன்றைய தினம் வேண்டுமென்றே துஷ்பிரயோகம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதால் இ. போ. ச. வை நம்பித் தனிப்பட்ட வாகனங்களை அனுமதிக்காமல் இருக்கமுடியாதென்றும் அந்த எம். பி. க்கள் சுட்டிக்காட்டினர்.

சென்ற பொதுத்தேர்தலில் இருந்ததுபோல வாகனங்கள் இம்முறை பொதுத்தேர்தலிலும் அனுமதிக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இப்பிரச்னை நாளையும் தொடர்ந்து விவாதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் உள்ள கிளை ஸ்தாபனமாகிய 134-ம் நம்பர் இரும்புக்கடையைக் கொடுக்க இருப்பதினால், குறித்த கடையை எடுத்து நடத்த விரும்புவோர் எங்களிடம் நேரில் தொடர்பு கொள்ளவும். A. R. சிவகுருநாதன், 170, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1786

## விற்பனைக்கு

பாடநூல்:

பொது விஞ்ஞான போதினி-எட்டாம் வகுப்பு முதலாம் பருவநூல், கல்வித் திணைக்கள வழிகாட்டிக்கு அமைவாக சிறந்த முறையில், படவிளக்கங்களுடன் அச்சிடப்பெற்று வெளிவந்துவிட்டது. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 1-50. சுன்னுகம் தனலக்குமி புத்தகசாலை. 1792

## தேவை

சமையல்காரர்:

எங்களது தொழிற்சாலையில் வேலை செய்யும் ஐம்பது யாழ்ப்பாணத் தொழில் பையன்களுக்கு சமையல் செய்ய ஆண் சமையற்காரர் தேவை. சந்திக்கவும். ஜாபர்ஜி பிரதர்ஸ், 218, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1794

நீடித்தவாழ்வு

## 12வது ஆண்டுவிழா

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையின் 12வது ஆண்டுவிழா அடுத்த மாதம் 1-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

பாடசாலை அதிபர் திரு. சி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் அகில இலங்கை ஒலிபரப்புக்குழு இராசரத்தினத்தின் சக்கடத்தார் நாடகம், ஆசிரியர் திரு வி. கணேசனின் வில்லுப்பாட்டு உட்படப் பல இசைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## முத்துசாமி வேண்டுகோள்

திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க உதவும்படி உலக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனத்தை அமைச்சர் முத்துசாமி கேட்

## தேவை

மல்லாகம் ஊர்மன்ற அலுவலகத்தில் பதில் கந்தோர் காவலாளராகக் கடமையாற்றுவதற்கு 25—35 வயதுக்குட்பட்ட இலங்கை வாசி ஆண் பாலாரிடமிருந்து (மல்லாகம், அளவெட்டி ஆகிய கிராமவாசிகளிடமிருந்து மாத்திரம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி 31-1-70.

தலைவர்,
ஊர்மன்ற அலுவலகம்,
1930 மல்லாகம்.

## விற்பனைக்கு

நாவல்கள்:

இந்திய எழுத்தாளர் சிரஞ்சீவியினால் வெளியிடப்படுகின்ற என் கதை வரிசையில் ''மாயாஜால மோகினி கதைகள்'' (ஆசிரியர்: சேரன்), ''முத்தான மூன்று'' (ஜெகசிற்பியன்) ஆகிய இரு நாவல்களும் யாழ்ப்பாணம் இலக்கியப் புதையல் பதிப்பகத் (91/9, இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)தில் விற்பனைக்குள்ளன. என்கதை வரிசை நாவல்களுக்கும் இலக்கியப் புதையல் பதிப்பகத்தினரே ஏக விநியோகஸ்தர். வியாபாரிகளும், வாசகர்களும் நேரடியாகவோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். 1797

புஸ்தகங்கள்:

யாழ்ப்பாணம் இலக்கியப் புதையல் பதிப்பக விற்பனை உரிமை பெற்ற இந்திய புஸ்தகங்களான ''மாயாஜால மோகினி கதைகள்'', ''முத்தான மூன்று'' ''அத்தாேடு ஆயிரம் இரவுகள்'' (நாஞ்சில் பி. டி. சாமி), நட்சத்திர பலன், இராசி பலன்—(1970) என்பனவற்றை யாழ்ப்பாண பஸ் நிலையத்தின் முன்புள்ள புவனேஸ்வரி நியூஸ் மார்ட்டிலும் பெறலாம். 1798

## விளையாட்டு விழா

திருகோணமலை, திங்கள்

திருமலையில் மார்ச் 6, 7, 8-ம் திகதிகளில் விளையாட்டு விழா நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. சிவஞானம் செய்து வருகின்றார்.

திருமலை கல்வி அதிகாரி இராணுவப்படைத் தளபதி பொலிஸ் அத்தியட்சகர் வட்டார காரியாதிகாரி ஆகியோர் இவ்விளையாட்டு விழாக் குழுவில் அங்கம்

# திருமண அழைப்பு

மணமகன்:- ஆறுமுகம் பத்மநாதன்
[இ. போ. ச. யாழ்ப்பாணம்]
மணமகள்:- முத்துக்குமாரு புவனேஸ்வரி
காலம்:- சௌமிய வருடம் தை 16 (29-1-70) வியாழக்கிழமை.
நேரம்:- இரவு 11.14-1.10.
அழைப்பு:- உறவினர்கள், நண்பர்கள் வருகைதந்து மணவிழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

முத்தட்டுமட லேன், கோண்டாவில். கு. ஆறுமுகம் தம்பதிகள்
சு. ஞானசுந்தரம் தம்பதிகள்.

# மணநாள் அழைப்பு

தை திங்கள் 16-ம் நாள் (29-1-1970) வியாழக்கிழமை இரவு 9-00 மணிக்கும் 11-14 மணிக்குமிடையிலுள்ள நல்வேளையில்

மணமகளில்லத்தில்

சிவஞானகுரு
(கணக்காளர், தேசிய வீடமைப்புத் திணைக்களம்)
சடாட்சரதேவி

இருவருக்கும் இறையருளால் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

மணமகனின் பெற்றோர்
சிம்மயானந்தகுரு தம்பதிகள்
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

மணமகளின் தாயார்
திருமதி வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம்
தொண்டைமானாறு. 1927

வலி. மேற்கு ச. ச. நிலைய

# உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

நவாலி, திங்கள்

வலி. மேற்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையே உள்ளூராட்சி வாரத்தையொட்டி விளையாட்டு மற்றும் கலை, கலைச்சாரப்போட்டிகள் நடைபெற்றன. மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் திரு. பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இப்போட்டி முடிவுகள் வருமாறு:

100யார் ஓட்டம் (சிரேஷ்ட பிரிவு): ப. விக்கிரமசிங்கம் திருக்குறள் ச. ச. நிலையம், வட்டுக்கோட்டை. கு சொர்ணலிங்கம், காந்திஜி ச ச நிலையம், வட்டுக்கோட்டை. எஸ். சிவலிங்கம், நவாலி ச ச நிலையம்.

மேற்பிரிவு 880 யார் ஓட்டம்: ஆர். இராசேந்திரம், திருக்குறள் ச ச நிலையம்: கே. சிவானந்தன், நவாலி ச ச நிலையம்.

கீழ்ப்பிரிவு 100 யார் ஓட்டம்: எஸ். தனபாலசிங்கம், காந்திஜி ச ச நிலையம். ஏ. செல்வரத்தினம், பாரதி ச ச நிலையம் அராலிவடக்கு.

மெதுவான சைக்கிள் ஓட்டம்: எஸ் சிவலிங்கம் நவாலி ச ச நிலையம். பி பத்திநாதர், திருக்குறள் ச ச நிலையம். ஜே ஜேசுதாசன், நவாலி ச ச நிலையம்.

மேற்பிரிவு நீளம்பாய்தல்: வீ விக்கிரமசிங்கம் திருக்குறள் ச ச நிலையம். கு சொர்ணலிங்கம், காந்திஜி ச ச நிலையம். எஸ். சிவலிங்கம், நவாலி ச ச நிலையம்.

ஒரு மைல் ஓட்டம்: ஆர். இராஜேந்திரம், திருக்குறள் ச ச நிலையம். ஆர் திருநவுக்கரசு திருக்குறள் ச ச நிலையம். எம் நடராசா மாதர் ச ச நிலையம் பண்டத்தரிப்பு.

கரபந்தாட்டம்: நவாலி ச ச நிலையம், திருக்குறள் ச ச நிலையம்.

பேச்சு: பி வசந்தகுமாரி சில்லாலை மாதர் ச ச நிலையம். ஆ. திருநாவுக்கரசு காந்திஜி ச ச நிலையம்.

பாட்டு (தனி), ரீ குணசிங்கம், மாதர் ச ச நிலையம் பண்டத்தரிப்பு. ஆர் [illegible] மாதர் ச ச நிலையம், பண்டத்தரிப்பு.

# திருமண அழைப்பு

மணமகன்: வாமதேவன் மணமகள்: சரோஜினிதேவி

அன்புடையீர்!

நிகழும் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் வரும் சுபவேளையில் மணமகள் இல்லமாகியசெல்லகிரி (யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதி) யில் திருமணம் நிறைவுறப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். அன்பர்கள், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் திருமண வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

முதலியார் செ. முத்துத்தம்பி
(மணமகனின் தந்தை)
தமிழகம், பாவட்டங்காடு,
யாழ்ப்பாணம். 1925

க பொ. தம்புசாமி 'சீப்சைட்',
(மணமகளின் தந்தை)
'செல்லகிரி', 105, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

# ''அபிவிருத்தி வேலைகளுக்கான தடையை நீக்கவும்''

## காங்கேசன்துறைப் பட்டினசபை அமைச்சருக்குக் கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைப் பட்டினசபை வரவுசெலவுத் திட்டம் உள்ளூராட்சி அமைச்சரால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் சபை கிராமத்துக்குத் தேவையான புதிய அபிவிருத்தி வேலைகளை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாமல் இருக்கிறது ஆகவே இக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்கவேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. திரு. ஆர். பிரேமதாசாவைக் கோரும் தீர்மானம் ஒன்று காங்கேசன்துறைப் பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

சபையின் தலைவர் திரு க. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் 6 அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் பின்வருமாறு.-

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைகள் அத்திவாரக்கல் நாட்டு விழாவைத் தொடர்ந்து இடைவிடாது நடைபெறுமென பிரதம மந்திரியும் தேசிய சேவைகள் அமைச்சரும் வாக்களித்தபோதிலும் இன்றுவரை அபிவிருத்திவேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது கவலைக்குரியது. இத்துறைமுக அபிவிருத்தி வேலைகள் இனி மேலும் தாமதியாது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இச்சபை பிரதம மந்திரியையும் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தையும் கேட்டுக்கொள்கின்றது.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட தொழிலாளர்களையும் குமாஸதாக்களையும் வேலைக்கு அமர்த்தும்போது காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் வாலிபர்தான் முதலில் வேலைவசதிவழங்கி அதற்கு பின் காங்கேசன்துறைப் பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் வேலையற்றவர்களுக்கு வேலைகள் வழங்கப்படவேண்டும். அதற்கு அடுத்தபடியாக வடமாகாணத்தில் வசிக்கும் வேலையற்றவர்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

முதலாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் பொதுச் சந்தைக்கு அருகாமையில் உள்ள மாடு அடிக்கும்காலை பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதிப்பதாலும் கடுமையான துர்நாற்றம் வீசப்படுவதாலும் உடனடியாக இக்காலை இவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்காத இடத்தில் அமைக்கப்படவேண்டும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# சமமாய்முடிந்த இரு போட்டிகள்

உரும்பராய், திங்கள்

இணுவில் இந்து விளையாட்டுக்கழக முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் மன்னார் பள்ளிமுனை சென்லுசியஸ் விளையாட்டுக் கோஷ்டிக்கு மிடையில் சென்ற வெள்ளிக்கிழமை உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 3-3 கோல்களைப்போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டன.


போட்டி ஆரம்பமானவுடன் பள்ளிமுனை வீரர்கள் மிகவும் சாதுரியமாக விளையாடிய இடது முன்னணி வீரர் தமது கோஷ்டிக்கு ஒரு கோல் அடித்தார். இதை தொடர்ந்து சூட்டோடு சூடாக இணுவில் கோஷ்டித் தலைவர் திரு. செ. இலகுநாதன் மிகவும் இலகுவாக ஒரு கோல் போட்டு சரிசமமாக்கினார்

பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற இப்போட்டிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரி உடற்பயிச்சி ஆசிரியர் திரு. எஸ். நவரத்தினம் அவர்கள் மத்தியஸ்தராக கடமை புரிந்தார்.

உரும்பராய் விளையாட்டுக்கழகமும், இணுவில் இந்து இரண்டாம் பிரிவுக் கோஷ்டியும் கலந்துகொண்ட மற்றுமொரு ஆட்டத்தில் இரு கோஸ்டிகளும் தலா 1-1 கோல் போட்டதினால் இப்போட்டியும் சரிசமமாக முடிவுற்றது இப்போட்டிக்கு திரு. ஆர். தங்கராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இந்த விளையாட்டுப்போட்டிக்கு உடுவில் கிராமசபைத் தலைவர் திரு எஸ். முத்துலிங்கமும், உரும்பிராய் பட்டினசபைத்தலைவர் திரு. எஸ். பத்மராஜாவும் தலைமை தாங்கினார்கள்.

# வட்டு கி. சபை உபதலைவர்



வட்டுக்கோட்டைக் கிராம சபையின் உபதலைவராக திரு. வயிரவநாதர் அமிர்தலிங்கம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். சபையின் பத்தாம் வட்டார உறுப்பினரான இவர் பல சங்கங்களில் உறுப்பினராயிருந்து இவர் பணியாற்றி வருகிறார்.

## 'விமானத்தபாலை தாமதியாது வழங்கவும்'

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவுக்கு விமானத் தபால் வசதி செய்துகொடுக்குமாறு ஊரதீவு இளந்தமிழர் மன்றம் அமைச்சரைக் கோரியுள்ளது.

புங்குடுதீவு தபால்நிலையத்துக்கு வரும்விமானத்தபால்கள் சாதாரண தபால்களுடனேயே விநியோகிக்கப்பட்டுவருகிறது. அண்மைக் கிராமமான வேலணையில் விமானத்தபால் உடனுக்குடன் விநியோகிக்கப்படும்போது இங்குமாத்திரம் தாமதிப்பதுமிகவும்வருத்தத்திற்குரிது. உடனடியாக இது பற்றி நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் மன்றத் தலைவர்திரு. பொன்கை வேந்தன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

'ஈழநாடு' காரியாலயத்தில்
விற்பனைக்குள்ள புத்தகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுகோள்

திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க உதவும் படி உலக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனத்தை அமைச்சர் முத்துசாமி கேட்டுள்ளார்.

வருகின்றனர்.

திருமலை கல்வி அதிகாரி இராணுவப்படைத் தளபதி பொலிஸ் அத்தியட்சகர் வட்டார காரியாதிகாரி ஆகியோர் இவ்விளையாட்டு விழாக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

கே. சிவானந்தன், நவாலி ச ச நிலையம்.

கீழ்ப்பிரிவு 100 யார் ஓட்டம்: எஸ். தனபாலசிங்கம், காந்திஜி ச ச நிலையம். ஏ. செல்வரத்தினம், பாரதி ச ச நிலையம் அராலிவடக்கு, பி. ஆரோக்கியநாதன், சென். செபஸ்தியான் ச ச நிலையம் மாதகல்.

கீழ்ப்பிரிவு 220 யார் ஓட்டம்: ஏ. செல்வரத்தினம், பாரதி ச ச நிலையம். எஸ் தனபாலகுணசிங்கம் காந்திஜி ச ச நிலையம். ஆரோக்கியநாதன் சென் செபஸ்தியான் ச ச நிலையம்.

கீழ்ப்பிரிவு நீளம்பாய்தல்: ஆ. செல்வரெத்தினம், பாரதி ச ச நிலையம். செ. செல்வராசா காந்திஜி ச ச நிலையம். கே. தயாபரன் காந்திஜி ச ச நிலையம்.

ஆ. திருநாவுக்கரசு காந்திஜி ச ச நிலையம்.

பாட்டு (தனி), ரீ குணசிங்கம், மாதர் ச ச நிலையம், பண்டத்தரிப்பு. ஆர் கிளேவ் மாதர் ச ச நிலையம், பண்டத்தரிப்பு.

பாட்டு (கோஷ்டி): முருகானந்தம் ச ச நிலையம். நாவாலி ச ச நிலையம்

வில்லுப்பாட்டு: முருகானந்தம் ச ச நிலையம், காந்திஜி ச ச நிலையம்.

நாடகம்: முருகானந்தம் ச ச நிலையம், காந்திஜி ச ச நிலையம்.

வாத்திய இசை: நவாலி ச ச நிலையம்.

கிராமிய நடனம்: சில்லாலை மாதர் ச ச நிலையம். காந்திஜி ச ச நிலையம்.

திருமதி பரஞ்சோதி திருவாளர்கள் கே. நடராசா, கே. வேல்முருகு, திருமதி அரியராசா, திருமதி பேள் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

(வேல. நி.(

# விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|---|
| 1 | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II | — | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் | — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் | — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூற்பட்டியல் | — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு | — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, | — | (கலிகோ பைன்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு(Album படங்களுடன்) | — | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் | — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் | — | M. பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) | — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
## அடிமைப் பெண்

இன்று மட்டும்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்· நாகேஷ்; சரோஜாதேவி
மற்றும்பலர் நடித்த
## அஞ்சல் பெட்டி 520

இன்று முதல்
சில தினங்களுக்கு மட்டும்
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
பாரத ஜனாதிபதியின் தங்கப்பதக்கம் பரிசுபெற்று அகில உலகத் திரைப்பட விழாக்களில் பரிசில்கள் பாராட்டுகள் பெற்ற மலையாளச் சமூகச் சித்திரம்



இரு
இளம் உள்ளங்களின்
உணர்ச்சிகளைப்
பிரதிபலிக்கும்
உன்னத சித்திரம்

சத்யன்
ஷீலா
நடித்த
## செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:சலீல்சௌத்திரி



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
★ சிவாஜி ★ பத்மினி
மற்றும் பலர் நடித்த
## தில்லானா மோகனாம்பாள்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர்.-தேவிகா-வீரப்பா
நடித்த
## ஆனந்த ஜோதி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
## ஒளிவிளக்கு

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
எஸ், எஸ்.ஆர் - தேவிகா
நடித்த
## மறக்கமுடியுமா?

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
## மர்மயோகி
4-30க்கு மட்டும்
HELICOPTER SPIES

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Robert Vaughn
Carol Lynley
in
HELICOPTER SPIES
(Color)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
LAW OF LAWLESS
Action thriller
(Scope)

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் வின்ஸர் ஸ்தாபனத்தார்
உங்களுக்கென்றே இந்தியாவிலிருந்து வரவழைத்து அளிக்கும்
ஓர் இனிய இசைத் தமிழ்ச் சித்திரம்
## யாழ். வின்ஸர் வெண்திரையில்
28-1-70 நாளை முதல் குதூகல ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்
★ கே. பி. சுந்தராம்பாள் ★ ஜெமினிகணேசன்
★ எம். கே. ராதா ★ பாலாஜி
மற்றும்பலர் நடித்த
ஜெமினியின் பிரமாண்டமான வெளியீடு!
# ஒளவையார்
(புதிய கொப்பி)
பார்க்கத் தவறியவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!
இன்றே கண்டு மகிழுங்கள்!
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ சலுகைகள் செய்யப்படும்.
மனேஜருடன் தொடர்பு கொள்ளவும். [போன்: 466]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் நிக்ஸன் கூறுகிருர்

# இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதங்களை அமெரிக்கா வழங்குமாம்

## மேற்கு ஆசியாவில் ராணுவ சமபலத்தை ஏற்படுத்த விருப்பம்

வாஷிங்டன், ஜனவரி 26

**இஸ்ரேலுக்கு மேலும் ராணுவ ஆயுதங்களை அமெரிக்கா கொடுத்துதவும் இத்தகவலை அமெரிக்க அதிபர் திரு. ரிச்சார்ட் நிக்ஸன் வெளியிட்டிருக்கிருர்.**

**வாஷிங்டனில் நடைபெற்ற யூத தலைவர்களின் மாநாட்டுக்கு அதிபர் நிக்ஸன் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் இஸ்ரேலுச்கு ஆயுதங்கள் கொடுப்பது பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிருர்.**

மேற்காஸியாவில் ராணுவ சமபலத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமானுல் இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதங்கள் கொடுத்துதவுமென்று அதிபர் யூதத்தலைவர்களுக்கு அனுப்பிய அச்செய்தியில் குறிப்பிட்டிருக்கிருர்.

லிபியாவுக்கு 100சண்டை விமானங்களைப் கொடுப்பதற்கு பிரான்ஸ் தீர்மானித்திருப்பதையடுத்து மேற்காஸியாவில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான நிலையில் அதிபர் நிக்ஸனின் இச்செய்தியும் வெளியாகியிருக்கின்றது.

மேற்காஸியாவில் அமைதியான ஒரு முடிவை ஏற்படுத்த அமெரிக்கா தீவிரமான முயக்சியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில், இத்தகராறில் சம்பந்தப்பட்டிருக்கும் நாடுகள் நேரடித்தொடர்புகள் மூலம் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சி எடுக்கவேண்டுமென்றும்இம் மாதிரியான முயற்சிகளின் மூலமே நிரந்தரமான அமைதி ஏற்படமுடியும் என்றும் அதிபர் நிக்ஸன் கூறினுர்.

தகராறில் ஈடுபட்டுள்ள நாடுகள் தமது எல்லைப் பிரதேசம் பத்திரமாக இருப்பதாக நம்பிக்கை கொள்ள வேண்டும். அமைதித்தீர்வுக்கு இது அவசியம் இந்த வகையில் மேற்காஸியாவில் ராணுவ சமபலத்தை நிலைநாட்ட அவசியமானுல் இஸ்ரேலுக்கு ஆயுதங்களைச் கொடுத்துதவுவோம் என்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிருர்.

நைஜீரிய படைகள்

# வெறியாட்டத்தில் இறங்கவில்லையாம்

## லேகோஸ் அறிவிப்பு

லேகோஸ், ஜன. 26

நைஜீரிய துருப்புகள் பியாப்ராவில் அட்டூழியங்களில் ஈடுபட்டதாக வந்த செய்திகளை நைஜீரிய அரசு செய்திகள் கூறின. இந்த அணிக்குப் பதிலாக முதலாம் அணி அங்கு அனுப்பப்படுவதாகவும் செய்திகள் கூறின. ஆனுல் இச்செய்தி தீர்மானத்தின் அடிப்படையில் இது நடைபெறுவதாக அறிவித்துள்ளது.

திருமலை

### தமிழாசிரியர் சங்கம்

உடும்பராய், திங்கள்

கிழக்கிலங்கைத் திருக்கோணமலைத்தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் திருக்கோணமலைத் தமிழ்ப்பண்ணையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. நா. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. அ. கருணுநிதி, தனுதிகாரி: செல்வி வீ. முத்தையா, உபதலைவர்கள்: திருமதி எஸ். ஜோசெப், திரு கே. கஜரத்தினம், உபகாரியதரிசி: திரு. எஸ். எஸ், மைக்கேல்.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபைப் பிரதிநிதியாக திரு. நா. கணபதிப்பிள்ளையும், பரிபாலன சபைப் பிரதிநிதியாகத் திரு. அ. கருணுநிதியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

### ரத்தசுத்திக்கு வெளிப்பூச்சு மருந்து

யாழ்ப்பாணம், திங்கள்

''டாக்டர்களினுல் எழுதிக் கொடுக்கப்படும் மருந்துகளுக்குப்பதிலாக வேறுமருந்துகளை தனிப்பட்ட மருந்துச் சாலைகளில் கொடுத்துவிடுகிருர்களாம். இதனுல் அப்பாவி நோயாளிகள் வேறு பல நோய்களுக்கும்உள்ளாக வே[illegible]டி ஏற்பட்டுவிடுகிறது.

ர[illegible]த்தைச் சுத்திகரிக்கும் மருந்து வாங்கச் சென்ற ஒருவருக்கு வெளிப்பூச்சு எரிவு மருந்து [illegible] பவம் ஒன்று [illegible] ஆஸ்[illegible]த்திரி வீதியிலுள்ள [illegible]

சண்டிகர் பிரச்னை

### பயமுறுத்தலுக்குபணிந்தால் நிலைமை மோசமாகும்

#### இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, ஜன. 25

சண்டிகார்பிரச்னைகுறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி எதிர்க்கட்சித்தலைவர்களுடன் சுமார் இரண்டு மணி நேரம் ஆலோசனைகள் நடத்தினுர்

மிரட்டலுக்கு அஞ்சி இப்பிரச்னைக்கு முடிவுகட்டினுல் நாட்டின் மற்றப் பகுதிகளிலும்இம்மாதிரிப்பிரச்னைகள் எழும் அரசாங்கத்திற்கு இதுவே பெரிய கவலையளிப்பதாயிருக்கின்றது என்று பிரதம மந்திரி எதிர்க்கட்சித் தலைவர்களிடம் கூறினுர்.

சன்ட்பத்தேசிங் தீக்குளிக்கப்போவதாகப் பயமுறுத்தியிருப்பது இப்பொழுதுள்ள நிலைமையை மேலும் சிக்கலாக்குவதாகுமென்று பிரதமர் கூறினுர்

கூட்டத்தில் கலந்து கொண்ட பல எதிர்க்கட்சிகள் சண்டிகார் பஞ்சாப்புக்கே சேரவேண்டுமென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். சிலர் சண்டிகார் மக்களின் தீர்ப்புக்கு இதனை விட்டுவிடவேண்டுமென்று வற்புறுத்தினுர்கள்

சண்டிகார்பிரச்னைகுறித்து ஜனவரி 26-ல் உண்ணுவிரதமிருப்பதென்றும், பெப்ரவரி 1-ல் தீக்குளிப்பதென்றும் தாம் எடுத்துள்ளமுடிவு உறுதியானது அசைக்கமுடியாதது என்று அகாலி தள தலைவர் சன்ட்பத்தேசிங் அறிவித்தார். அதற்குள் தமது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் தமது முடிவு ஒத்திவைக்கப்பட முடியாதது என்றும் அதனை மாற்றுவது தமது கையில் இல்லை என்றும் அவர் சொன்னுர்

ஏற்கனவே அறிவித்தபடி தாம் ஜனவரி 26 காலை 10 மணிக்கு உண்ணுவிரத[illegible] துவக்கப்போவதாகவும் பெப்ரவரி 1 வரை தாம் உயிருடனிருந்தால் அன்று தீக்குளிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார். ச[illegible]டிகரும் பக்ரா திட்டமும் [illegible]

### மாற்றுப்பயிர் செய்கைக்கு ஊக்கம்

கோட்டை, திங்கள்

மாற்றுப் பயிர் செய்கையை விஸ்தரிப்பதற்காக சிறியதேயிலை றப்பர் தோட்டங்கள் உள்ள பகுதியில் அப்பகுதியினருக்கு மாற்றுப் பயிர் செய்கை பற்றி விளக்கிக் கூறுவதற்கு கமத்தொழில் நிலையங்களை நிறுவ விவசாய இலாகா தீர்மானித்துள்ளது.

விவசாயத்தைப் பல வகைப் படுத்துவதற்காக அரசாங்கத்தின் ஆலோசனையுடன் விவசாய இலாகா மாற்றுப்பயிர் செய்கைக்கு ஊக்கமளிக்க முயற்சியெடுத்து வருகிறது. மலைநாட்டுப் பகுதியில் சிறிய தோட்டங்கள் உள்ள பகுதிகளில் இந்த மாற்றுப் பயிர்களை வெற்றிகரமாகப் பயிர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்படி இலாகாவினுல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தோட்டங்களில் றப்பர், தேயிலை வருவாயிலும் பார்க்க மரவள்ளிபோன்ற இம்மாற்றுப் பயிர்கள் கூடிய வருவாயைக் கொடுப்பதாகவும் கூறப்படுகிறது.

---

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 27—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30.

பகல் 12-03, 1-00.

### கம்யூனிஸ்ட் தலைவர்கள் வெளியூரில் பயிற்சி

சென்னை, ஜன. 26

தமிழ் நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட்தலைவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று ராணுவப் பயிற்சி பெற்றுதிரும்புகிருர்களாம். இவர்களின் நடவடிக்கைகள் பற்றி தமிழ்நாடு அரசு காண்காணிப்புடன் இருக்கும் என்று முதல்வர் அறிவித்திருக்கிருர்.

தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்டுக்கட்சி அமைத்துள்ளதொண்டர் படையின் தலைவர்கள் சண்டிகருக்குச் சென்றுஅங்குபயிற்சி பெற்று வருவதாகவும், அந்தப்பயிற்சிராணுவப்பயிற்சி ரீதியில் இருப்பதாக தமக்குத்தகவல் கிடைப்பதாகவும் கேள்வி நேரத்தின்போதுமுதலமைச்சர் திரு.மு.கருணுநிதி தெரிவித்தார். பயிற்சி பெறும் அத்தலைவர்கள் திரும்பிவந்த பிறகு என்ன செய்கிருர்கள் என்பதை தமிழக அரசு உன்னிப்பாககவனிக்கும் என்றும் முதல்வர் கூறினுர்.

1967-ம் ஆண்டில் திருவாரூரில் 1,000 பேர் கொண்ட தொண்டர்படையை இடது கம்யூனிஸ்ட் கட்சியும் 1969-ல் கீளுரில் 500 பேர் கொண்ட தொண்டர் படையை வலது கம்யூனிஸ்ட் கட்சி அமைத்ததையும் இத்தொண்டர் படைகளின் நடவடிக்கைகளை அரசு கவனித்து வருவதாயும் முதல்வர் கூறினுர்.

தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்த திரு. ஜோதி பாசுவிற்குப் பொலிஸ் பாதுகாப்புத் தரப்படவில்லை என்ற புகாருக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில் அவர் வருகை பற்றி சம்பிரதாயப்படி தகவல் தரப்படவில்லை என்றும், எனினும் அவருக்கு மற்ற அரசியல் தலைவர்களுக்குத் தரப்படும் பொலிஸ் பாதுகாப்பு தரப்பட்டதாயும் கூறினுர்.

காங்கிரஸ் சேவா தளம் பற்றி ஓர் உறுப்பினர் கேட்டதற்கு முதல்வர் அளித்த பதிலில் 'சேவாதளம்' (தொண்டர் படை) முன்பு இருந்தது, இப்போது இருக்கிறதா என்று தெரியவில்லை என்ருர்

'வெண்புருசேனை' பற்றி மற்ளுெரு உறுப்பினர் கேட்டதற்கு 'அதன் தலைவர்கள் வேறு பக்கத்திற்குப் பறந்து விட்டனர்' என்ருர் (சிரிப்பு)

### தமிழ் மன்ற விவாதக்குழு

கோட்டை, திங்கள்

அண்மையில் திரு. பால்பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இலங்கை தொழில் நுட்பக்கல்லூரித் தமிழ் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் ஒரு விவாதக்குழுதெரிவு செய்யப்பட்டிருக்கிறது. திருவாளர்கள் வே அ திருவிளங்கம், இ கருணுகரன், வே ஜெபோஸ், வி சிக கிருஷ்ணன், ச ஆனந்தலிங்கம்ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

---

### அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொக்குவில்கிழக்குகோணுவளை வைரவசுவாமி கோவில் அடிக்கல் நாட்டுவிழா நாளைக் காலை நடைபெறவிருக்கிறது. விசேஷ பூசைகளும்அபிஷேக ஆராதனைகளும் இவ்விழாவில் இடம்பெறுகின்றன.

---

### சைவம் வளர தமிழ்வளரும்

பருத்தித்துறை, திங்கள்

'இன்று நாத்திகமும்அதைத் தொடர்ந்து பாதங்களும் தலைதூக்கியுள்ளமைக்குக் காரணம், மதப்பற்றுக் குறைந்தமையே. ஊருக்கொரு சிறந்த கோயில் இருந்தால் சமுதாயத்தில் பண்பாடு கலாசாரம், மனிதாபிமானம் ஆகியன சிறந்து விளங்கமுடியும். பழைய மரபுக்களைத்தழுவி, கோவில்களிற் புராணப்படிப்பு, கதாகாலட்சேபம் ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்தப் படித்தவர்கள் முன்வர வேண்டியது அவசியம்.''

இவ்வாறு நேற்று முன் தினம் மீண்டும் வல்வை முத்துமாரியம்மன் கோவில் [illegible]

---

### கலைவிழா

கோட்டை, திங்கள்

கட்டுப்பெத்தை இலங்கை உயர் தொழில்நுட்பவியற் கலாசாலைத் தமிழ்மன்றத்தின் ஆதரவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம்மாதம் நடைபெறவிருந்த கலைவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது பெப்ரவரிமாதப் பிற்பகுதியில் இவ்விழா நடைபெறுமாம்.

கவியரங்கம், விவாத அரங்கம், கருத்தரங்கம், வில்லுப்பாட்டு, பரதநாட்டியம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

---

### 'வீதியைத் [illegible]'

மெக்ஸிக்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேகோஸ், ஜன. 26

நைஜீரிய துருப்புகள் பியாபராவில் அட்டூழியங்களில் ஈடுபட்டதாக வந்த செய்திகளை நைஜீரிய அரசாங்கம் மறுத்திருக்கின்றது. நைஜீரிய ராணுவத்தின் மூன்றும் அணி தம்வசமிருந்த பிரதேசத்தில் கற்பழிப்பிலும், சூறையாடுவதிலும், கொலை புரிவதிலும் ஈடுபட்டதாகவும் முன்னர் செய்திகள் கூறின. இந்த அணிக்குப் பதிலாக முதலாம் அணி அங்கு அனுப்பப்படுவதாகவும் செய்திகள் கூறின. ஆனல் இச்செய்தியில் எதுவித உண்மையும் இல்லையென்று நைஜீரிய அரசு அறிவித்திருக்கின்றது. ராணுவ அணிகள் மாற்றப்படுவது பற்றி குறிப்பிட்டுள்ள நைஜீரிய அரசாங்கம் முன்னர் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் இது நடைபெறுவதாக அறிவித்துள்ளது.

## கிலி பிடித்த மக்கள் மீது விமானம் ஏறியது

பியாப்ரா வீழ்ச்சியுற்ற கடைசி நேரத்தில் யூலி விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்த கடைசி விமானத்தில் ஏறிப் போய் விடுவதற்கு ஏராளமானவர்கள் முயற்சி செய்தார்கள். கிலிபிடித்துப் போய் இருந்த இந்த அகதிகள் எப்படியும் விமானத்தில் ஏறிப் போய்விடவேண்டும் என்று முயற்சி செய்கையில் விமானி அந்தக் கூட்டத்தின்மீது விமானத்தைச் செலுத்தியதாகவும் இதில் ஏராளமானவர்கள் மரணமானுர்கள் என்று கூறப்படுகின்றது. விமானம் கொள்ளும் அளவுக்கு மேல் ஆட்கள் ஏறவேண்டாம் என்று விமானி எச்சரித்ததாகவும் ஆனல் பிரயாணிகள் இதை உதாசீனம் செய்ததினுல்சன நெரிசலுக்குள்ளாக விமானத்தைச் செலுத்தியதாகவும் பார்வையாளர்கள் கூறினுர்கள்.

பியாப்ராவின் முன்னுள் தலைவர் கேணல் ஒஜுக்கு நாட்டை விட்டு ஓடிய தினமான ஜனவரி 9-ந் திகதி யூலி விமானநிலையத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாம்.

நிமிஷத்துக்கு நிமிஷம் முன்னேறி வந்துகொண்டிருந்த நைஜீரிய சமஷ்டிப் படைகளிடம் பியாப்ரா வீழ்ச்சியுறுவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக கேணல் ஒஜுக்கு தமது நெருங்கிய சகாக்களோடும் ஏராளமான தஸ்தாவேஜுகளுடனும் யூலி விமான நிலையத்திலிருந்து அவசரமாகப் புறப்பட்டுச் சென்றதாக நம்பிக்கை வட்டாரங்கள் கூறின.

அன்றிரவு யூலி விமான நிலையததிலிருந்து 8 விமானங்கள் புறப்பட்டன. முன்னுள் பியாப்ரா அதிகாரிகளும் அவர்கள் குடும்பங்களும் தப்பி ஓடுவதற்காக விமானநிலையத்துக்கு வந்த பொழுது தான் நெரிசலும் விபத்தும் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஒருலு மாகாணத்திலிருந்து மூன்றுவது நைஜீரிய அணி இப்பொழுது வாபஸ் பெறப்பட்டுவிட்டது ஒவேரிப் பகுதியில் பொலிசார் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறுர்கள். பொதுமக்களைத் துன்புறுத்தும் ராணுவத்தினர்மீது அவர்கள் கடும் தண்டனை விதிக்கிறுர்கள். ஒரு மாகாணத்தில் முதலாம் அணியைச் சேர்ந்த முஸ்லிம் சிப்பாய்கள் நிலைகொள்ளத் தொடங்கியிருக்கிறுர்கள்.

## திருமதி கமலாவுக்கு பத்ம பூஷன் விருது

புதுடில்லி, ஜன. 26

பிரபல நாட்டிய தலைவர் திருமதி கமலாவுக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டிருக்கிறது குடியரசு தினத்தையொட்டி 28 பேருக்கு பத்மபூஷன் விருது வழங்கப் பட்டிருக்கின்றது.

கடந்த 4 ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் பாரதரத்னம் விருது எவருக்கும் வழங்கப்பட வில்லை. 1966ம் ஆண்டில் காலஞ்சென்ற பிரதமா லால்பகதூர் சாஸ்திரிக்கு இந்த விருது வழங்கப்பட்டது

கண்டசாலா வெங்கடேஸ்வரராவ், புல்லாங்குழல் வித்துவான் ரி. ஆர். மகாலிங்கம் போன்றவர்களுக்கும், கிரிக்கட் வீரர்கள் பிரசன்னுவுக்கும் பேதிக்கும் வழங்கப்பட் பத்ம ஸ்ரீ பட்டம் பாடகி சுந்தராம்பாளுக்கு வழங்கப்பட்டது.

---

### மெக்ஸிக்கோவில்

## 20 பேர் பலி

மெக்ஸிக்கோசிட்டி, ஜன. 26

மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட விமானவிபத்தென்றில் குறைந்தது 20 பேர் பலியானுர்கள் இவர்களில் 15 பேர் பத்திரிகை நிருபர்கள்.

மெக்ஸிக்கோவில் நடைபெறும் அதிபர் தேர்தல் பிரசாரங்கள் சம்பந்தமான செய்திகளை இந்த நிருபர்கள் சேகரித்துக் கொண்டிருக்கையில் இந்த விபத்து ஏற்பட்டது.

### திருநெல்வேலிகலாமன்ற

## மாலைநேர வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த வியாழக்கிழமையன்று திருநெல்வேலி கலாமன்றசனசமூகநிலையத்தினர் மாலைநேர வகுப்புக்களை ஆரம்பித்துள்ளனர். இவ் வைபவத்துக்கு திரு. வி. கே. கந்தையா தலைமை வகித்தார். ஆசிரியை திருமதி சிவஞானசுந்தரம் வகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாரம்பவிழாவில் ஆசிரியர் திரு. இ. தெய்வேந்திரம், திரு. புவனேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர்.

## நூல் நிலையம் திறப்பு விழா

பூநகரி, திங்கள்

பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச்சங்கத்தால் அமைக்கப்பட்ட நூல் நிலையத்தைஎதிர்வரும்30ம்திகதி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா திறந்து வைப்பார்.

இந்நூல் நிலையம் சங்க அங்கத்தவர்கள் பொது மக்கள் பண உதவியோடு சிரமதான மூலம் கட்டப்பட்டது.

நூல் நிலையத்தை திறந்து வைக்கவரும் அமைச்சரை சங்கத்தலைவர்: திரு. பொ. விஞயகமுர்த்தியும், செயலாளர்: திரு. பொ. தில்லைநாதனும் வரவேற்பார்கள்.

இதைத்தொடர்ந்து சங்கப்போஷகர் திரு வீ. ஆனந்தசங்கரி தலைமையில்பொதுக் கூட்டம் நடைபெறும்.

---

...ஏற்பட்டுவிடுகிறது.

இரத்தத்தைச் சுத்திகரிக்கும் மருந்து வாங்கச் சென்ற ஒருவருக்கு வெளிப்பூச்சு எரிவு மருந்து கொடுக்கப்பட்டசம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்துச்சாலை ஒன்றில் அண்மையில் நடைபெற்றுள்ளது. வீடுசென்ற நோயாளி மருந்தைக்குடிக்க ஆரம்பித்த போதுதான் தற்செயலாக இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டதாம். (காரை. நி.)

மணிக்கு உண்ணாவிரதம் [illegible] துவக்கப்போவதாகவும் பெப்ரவரி 1 வரை தாம் உயிருடனிருந்தால் அன்று தீக்குளிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார். [illegible] கரும் பக்ரா திட்டமும் [illegible] சாப்புக்குத் தரப்படவேண்டும் என்பது பத்தேசிங் கோரிக்கை.

தீக்குளிக்கும் யோசனையை கைவிடும்படி காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா விடுத்த கோரிக்கையையும் சன்ட்பத்தேசிங் நிராகரித்து விட்டார்.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30. பகல் 12-03, 1-00.

இரவு 7-15 வயலின், 7-45 நேயர் கடிதங்கள், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்ணுடகஇசை.

---

# செக். தலைவர் டூப்செக் துருக்கி வந்து சேர்ந்தார் நிருபர்களிடம் சிக்கித்திண்டாட்டம்

அங்காரா, ஜன. 26

**செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னுள் தலைமைக் காரியதரிசி திரு. அலெக்சாண்டர் டூப்செக் துருக்கி வந்து சேர்ந்துள்ளார்.**

திரு டூப்செக்கை ஏராளமான பத்திரிகை நிருபர்களும் புகைப்படம் எடுப்பவர்களும் சூழ்ந்துகொண்டார்கள். திரு. டூப்செக்கிற்கு சங்கடம் ஏற்படாமலிருப்பதற்காக பொலிசார் பெரும்பாடுபட்டு நிருபர்களையும் படம் பிடிக்கிறவர்களையும் அப்புறப்படுத்த முயன்றுர்கள். நிருபர்களின் கேள்விகளுக்கு திரு. டூப்செக் பதில் கூறமறுத்துவிட்டு பக்கத்திலுள்ள ஒரு கட்டிடத்தில் ஒதுங்கிக்கொண்டார்.

செக்கோஸ்லவாக்கியாவில் தாராளக் கொள்கையொன்றைக் கடைப் பிடித்ததின் மூலம் சோவியத்யூனியனதும் வார்சோ ஒப்பந்த நாடுகளினதும் வெறுப்புக்குள்ளாகிய திரு. டூப்செக் கட்சியின் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இவர்கட்சியின் பொதுக்காரியதரிசியாகவிருந்தபொழுது ரஷ்யப் படைகளும், வார்ஸோ ஒப்பந்தநாடுகளும் ராணுவ ஆக்கிரமிப்புசெய்தன. அதன்பிறகு திரு டூப்செக் பதவியிலிருந்து நீக்கப்பட்டு டாக்டர் ஹுசாக் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டார்.

இப்பொழுது திரு. டூப்செக் செக்கோஸ்லவாக்கியாவின் தூதுவராக வெளிநாட்டுக்குஅனுப்பப்பட்டுள்ளார்.

# 'இந்திராவின் குண நலன்களை உலகம் அறிந்தது எப்போது?'

## கம்யூனிஸ்ட் பிரமுகர் விளக்குகிறுர்

மட்டுவில், திங்கள்

'திருமதி இந்திராகாந்தி பிரதமராக பதவிபெறும் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அவரின் குணங்களையும் கொள்கைகளையும் நன்கு அறிந்திருக்கவில்லை. வழமைப்படி இந்திய ஜனுதிபதி தெரிவின் போது உப ஜனுதிபதியாக இருந்த திரு. வி. வி. கிரியை இந்திய ஜனுதிபதியாக்கியே தீரவேண்டும் என்ற பிரதமர் இந்திராவின் பிடிவாதக் கொள்கையில்தான் அவரின் குணத்தினை இந்திய காங்கிரஸ்காரர் மட்டுமல்ல; அகில உலகமுமே அறிந்து கொள்ள முடிந்தது. இந்திய ஜனுதிபதி திரு. வி. வி கிரி ஓர் தொழிற்சங்கவாதி முதலாளித்துவத்திற்கும் பிற்போக்கு கொள்கைகட்கும் எதிரானவர் எனவே அவரை ஜனுதிபதி யாக்கிஞல் முதலாளித்துவமும்பிற்போக்குவரதமும் அழிந்துவிடும்என்ற பயத்திஞலேயே இந்திய 'சின்டிகேட்' காரர்கள் ஜனுதிபதி கிரியை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டனர். இன்று, பிரதமர் இந்திராகாந்தியையும் ஜனுதிபதி கிரியையும் அரசியலில் இருந்து ஒதுக்குவதே 'சின்டிக்கேட்' காரர்களின் நோக்கம்.''

சுன்னுகம் பட்டின சபையின் ஆதரவில் பொதுஜன நூல் நிலையம் நடத்தும் கருத்தரங்க நிகழ்ச்சியில் ''இந்தியாவும் இந்திராவும்'' என்னும் பொருள் பற்றிப் பேசிய மல்லாகம் கிராமசபைத்தலைவரும் வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ)த்தலைவருமாகிய திரு. வ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறிஞர்.

பட்டினசபை விளையாட்டரங்கில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

---

...கதாகாலட்சேபம் ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்தப் படித்தவர்கள் முன்வர வேண்டியது அவசியம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் மீண்டும் வல்வை முத்துமாரியம்மன் கோவில் முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வீ. வீ. இராமசாமிப்பிள்ளை தனதுரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் சைவமும் தமிழும் ஒன்ருக இறுகப் பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்துள்ளன வென்றும், சைவத்தை வளர்ப்பது தமிழை வளர்ப்பதற்குச் சமமானதாகுமென்றும் கூறிஞர்.

...கம், கருத்தரங்கம், வில்லுப்பாட்டு, பரதநாட்டியம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

## 'வீதியைத் திருத்துக'

வேலணை, திங்கள்

சுருவில்-ஊர்காவற்றுறை வீதி, திருத்தப்படாமல் இருப்பது குறித்தும், இதன் மூலம் மழைகாலத்தில் வாகனப்போக்குவரத்துக்கு ஏற்படும் இடைஞ்சல் பற்றியும் இப்பகுதிமக்கள் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

தை மாதம் 14-ம் திகதி 27-1-70]

**மேஷம்-** எதையும் முன்னணியில் நின்றுசெய்வதை பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடம் உண்டு. விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரும். பொறுமை விரும்பத்தக்கது.

**ரிஷபம்-** செய்தொழிலால் சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம். சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்டும. உற்சாகமான தினம்.

**மிதுனம்-** முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும். பந்துக்களுடன் தொடர்புகள் பெருகும். பம்பரம்போல் சுழன்று பணிஆற்றுவீர்கள். பாராட்டுதலுக்கும் இடம் உண்டு.

**கடகம்-** உடல்நலத்தில் அபிவிருத்தி தென்படும் குடும்பத்தில் சுபகருமங்களும் இடம்பெறும். பயந்திடக்கூடிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படலாம். கண்ணியமானதினம்.

**சிம்மம்-** எதையும் ஏற்று நடத்தக்கூடிய மனத்திடம் ஏற்படும். குடும்பத்தில் தலைமை ஸ்தானம் கிடைக்கும். இனியவை உரைப்பதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். செல்வாக்கு வளரும்.

**கன்னி-** சுற்றுடலில் புதிய உற்சாகம் ஏற்படும். உள்ளத்தில் உறுதி தோன்றும். உங்களை முன்னணிக்கு அழைத்துச்செல்லும் கண்ணியமான தினம்.

**துலாம்-** பேச்சுவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்கு செல்வாக்கை தேடித்தரும். வரவிலும் உயர்வுகாணும் சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலகம்.

**விருச்சிகம்-** சுறுசுறுப்புக் குன்றும். உமது வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறுபூசல் தோன்றி மறையும் கொள்கையில் கோணலுடன் சோபமும் அதிகரிக்கும் அமைதி நன்று.

**தனுசு-** தன்மான மிகுதிக்கும், ஆதரவுக்கும் இடம் உண்டு. சிலருக்கு வாகன சுகம் உண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுத்துவருவார்கள். கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**மகரம்-** கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரில் இருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்கு செல்வாக்குப் பெருகும். நின்மதியான தினம்.

**கும்பம்-** மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாக கிடைக்கும், எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினுல் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்-** புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள். இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பலனை அளிக்கும். களஸ்திரவழியாலும் நன்மைகள் சேருவதற்கும் இடம் உண்டு. வரவேற்கவேண்டியதினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தன்னுடையவும் தன் கிராமத்தினுடையவும் கௌரவத்தைப் பாதுகாக்கத் தன் உயிரையும் தியாகம் செய்வதுதான் ஒவ்வொரு கிராமவாசியின் வாழ்க்கையின் தலைசிறந்த கொள்கையாக இருக்கும்.
— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 14-ந் திகதி (27-1-70)

## ஏன் இந்தப் பாகுபாடு?

அரசாங்க ஊழியர் குடியிருப்பதற்கு வீடுகள் வழங்குவதில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் புதிய நிபந்தனை விதித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானுல் இந்த நிபந்தனை அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அரசாங்கத்தின் உத்தரவின் மீதுதான் இது விதிக்கப்பட்டதா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

அரசாங்க ஊழியர் அனைவரும் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லையென்பது உண்மையே. இருக்கும் வீடுகளை எல்லா அரசாங்க ஊழியருக்கும் பகிர்ந்துகொடுப்பது சுலபமல்ல. ஊழியரின் குடும்பநிலை, பிள்ளைகளின் தொகை, சேவைக்காலம், வீட்டுக்கு விண்ணப்பித்துக் காத்திருந்த காலம் ஆகியவற்றை கவனத்திற்கொண்டு பரிசீலனைசெய்து அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கலாம். இதில் நியாயமிருக்கிறது. இவற்றைப் பரிசீலனைசெய்தும் வீடுகள் வழங்குவதில் சிரமம் இருந்தால் திருவுளச்சீட்டுப் போட்டு வீடுகள் வழங்கலாம். இதிலகூட யாரும் குறை சொல்வதற்கு இடமிருக்காது. அரசாங்க வீடமைப்புத் திட்டங்களில் பொது மக்களுக்கு வீடுகள் வழங்குவதிலும் இதுபோன்ற முறைகளே பின்பற்றப்படுகின்றன. ஆனல் திருகோணமலை அரசாங்க அதிபர், அரசாங்க ஊழியருக்கு வீடு வழங்குவதில் புள்ளிகள் போட்டு ஆகக் கூடிய புள்ளிகள் கிடைக்கும் அரசாங்க ஊழியருக்கு வீடுகள் வழங்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்திருக்கிறாராம். சிங்களத்தில் மூன்றுந் தரத் தேர்ச்சிபெற்ற அரசாங்க ஊழியருக்கு ஆகக்கூடிய புள்ளிகள் அதாவது 30 புள்ளிகள் கிடைக்குமாம்.

சேர்ந்த பழைய ஊழியருக்கும் குடியிருப்பதற்கு அரசாங்க வீடுகள் கிடைக்க முடியாது. சிங்களத்தேர்ச்சி பெறுதவர்களும் பழைய அரசாங்க ஊழியரும் பெரும் பாலும் தமிழ்பேசுபவர்களாகவே இருப்பர் என்பது தெளிவு. தமிழ்பேசுவோர் சேர்வதில் இன்றுள்ள கஷ்டம் கொஞ்சமல்ல. சேவையில் சேர்ந்த பின்னர் அவர்கள் அனுபவிக்கவேண்டிய சங்கடங்களும் குறைந்தவையல்ல. பாடசாலையில் சிங்களமே படிக்காமல் தமிழ் மூலம் கல்வி கற்று தமிழில் பரீட்சை எழுதி அரசாங்க சேவையில் சேர்ந்த பின் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற நிபந்தனையை ஏற்று நிறைவேற்றவேண்டிய நிலையில் உள்ளவர்கள் இந்த ஊழியர். முற்றிலும் புதிய மொழியில் தேர்ச்சிபெற்ருல்தான் சம்பள உயர்வு, பதவிஉயர்வு கிடைக்குமென்பது மட்டுமல்ல. அரசாங்க சேவையிலும் தொடர்ந்திருக்கவும் முடியும். குடியிருக்க வசதியான வீடு, வீட்டில் தொல்லையில்லாமல் நிம்மதியாக இருந்தால்தான் சிங்களத்தைப் படித்து தேர்ச்சியடைய முடியும். தனிப்பட்ட வீடுதேடிச் சொந்தக்காரரின் வீடுகளில் குடியிருக்கும் அரசாங்கஊழியர்கள் படும்பாடு பலரும் அறிந்ததே. நிலைமை இப்படியிருப்பதால் சிங்களத் தேர்ச்சிபெருதஊழியருக்குக் குடியிருப்பு வீடுகள் வழங்கப்படுவது நியாயம். சிங்களத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கே குடியிருப்பு வீடுகள் வழங்குவது என்ற நிபந்தனை அரசாங்க ஊழியர்களுக்குள் புதியதொரு வர்க்கத்தைச் சிருஷ்டிப்பதுடன் அவர்களுக்குள் பாகுபாட்டையும் வளர்க்க உதவுவதுடன் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டும்

# கல்வித் தரம் குறைவதற்கு ஆசிரியர் காரணமல்ல

— டீ. டீ. நாணுயகார —

**கல்வியின் தரம் குறைந்துவருவதற்கு ஆசிரியர்கள் காரணமல்ல என்று ஆணித்தரமாகக் கூறும் திரு. நாணுயக்கார காரணங்களையும் இங்கு விளக்குகின்றுர். வடமாகாண ஆசிரியர் சங்கச் செய்திச் சுருளான ஆசிரியர் உலகத்தில் வெளியான இலிம்ப காமினி வித்தியாலய அதிபர் திரு. டீ. டீ. நாணுயக்காராவின் இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

நான் தமிழ்மொழி செம்மொழி என்று அறிந்தேன். அதனுல் அதனைக் கற்கவேண்டும் என்று ஆசை எழுந்தது. கற்கத் தலைப்பட்டேன் என்ஆசை வீண்போகவில்லை. தமிழ்ச் சகோதரருடன் பேசிப் பழகும் அளவுக்கு என் தமிழறிவு வளர்ந்துவிட்டது அவ்வளவுடன் என் இன்பம் நின்றுவிடுவது எனக்கு விருப்பமில்லை. பழந்தமிழ் காப்பியங்கள், புராண இதிகாசங்கள், சங்க நூல்கள் எல்லாவற்றையும் ஓரளவாவது கற்கவேண்டுமென்பது என் பேரவா. ஆனுல் என் னவா நிறைவேற என் வாழ்நாள் போதுமா? என்ற கவலை. இக்கவலைக்கு மருந்தாக என் தமிழாசிரிய சகோதரர்கள் தம் பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும்படி கோருகின்றனர். நானும் ஓர் ஆசிரியனல்லவா? இனம் இனத்தை நாடுவது தானே முறை

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று அழகொழுந் தமிழிலே கற்றுணர்ந்தேன். அதற்காகவாவது என் இன்பத்தை என் சகோதரத் தமிழாசிரியர்களுடன் பகிர்வான் வேண்டி 'ஆசிரிய உலகம்' என்ற ஆசிரியர் நலங்கருதும் ஏட்டில் எழுத அவாவுறுகின்றேன். 'ஆசை வெட்கமறியாது' என்பது பழமொழி. என் மழலைத் தமிழிலுள்ள குற்றங்களைக் களைந்து ஏதும் நலமுண்டேல் அதுவும் எனக்குத் தமிழ் அளித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியப் பெருமக்கட்கே உரித்தென்று உணருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்கிறன்.

நல்ல உலகத்தைச் சிருஷ்டிப்பவன் ஆசிரியனே. அறிவாற்றல் நிறைபிரஜைகளை உருப்படுத்துபவன் ஆசிரியன். இந்த நல்ல குருபீடத்தை மதிப்பிடுபவர்கள் அவர்களிடம் கற்று முன்னேறி நாட்டில் நற்பிரஜைகளான மாணவர் சமுதாயமே உண்மையான கல்வித் தொண்டாற்றிய ஆசிரியர்களை உலகம் மதித்தே வாழும். அவ்வாறு மதியாது விட்டால் அது பிரஜைகளின் தவறல்ல அது குருபீடத்தின் தவறென்றே சொல்லவேண்டும்.

இன்று கல்வியின் தரம் மிகக்குறைந்துவருகின்றது என்பதை நாம் நன்குணர்கி

யின் நோக்கம் மாறிவிட்டது.

இலவசக் கல்வித்திட்டம் தோன்றியபின் நாட்டிலே கற்கும் மாணவர்கள் தொகை கூடிவிட்டது. அத்தோடு கட்டாயக் கல்விகாரணமாகவும் நாட்டிலே கல்வி கற்போர் தொகை கூடிவிட்டது. மாணவர் தொகை கூடவே கல்விப் பிரச்னைகளும் புதிது புதிதாகத் தோன்றத் தொடங்கியுள்ளன. முற்காலம் போலன்றி இக்காலத்தில் அகலமான படிப்புநடைபெறுகின்றது ஒரு சாதாரண நடுத்தர வகுப்பு மாணவன் கிட்டத்தட்ட 15 பாடங்களைக் கற்கவேண்டியவனுகின்றுன். அதனுல் படிப்பு ஆழங்குறைந்து அகலமானதாக அவனது தேர்ச்சியின் தரமும் குறைந்துவிடுகிறது. இடைக்காலத்தில் வாசிப்பு எண், எழுத்து என்ற மூன்று பாடங்களுக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இக்காலத்திற் பல பாடங்கட்கு பிரித்தளிக்கப்பட, பாடவேளை குறைய மாணவனது கல்வி அத்திவாரமற்றதாகிவிடுகிறது அத்தோடு சமீபகாலத்திற் புகுத்தப்பட்ட தடையற்ற வகுப்பேற்றமும் மாணவரது கல்வித்தரத்தின் வளர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமைந்தது எவ்வாருயினும் மாணவன் ஓராண்டு காலத்தை ஒருவாருகக் கழித்தபின் அடுத்த வகுப்புக்குப் போகும் நிலைஇடைக் காலத்தில் ஏற்பட்டபின் மாணவர் தங்குதடையின்றி வகுப்பேற்றம் பெற்றுக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பிற்கு [illegible]டுகின்றனர். [illegible]யே மாணவர் ஒரு பரீட்

பயனுகத் தண்டனை புறக்கணிக்கப்பட்டுவிட்டது தண்டனை மாத்திரம் ஆசிரியனுக்கு வேண்டிய ஒன்றுஎன்பது என்கருத்தன்று. பண்டைக் கால நால்வகை உபாயங்களில் தண்டம் இறுதியானதாகவே பயன்பட்டது. ஆகவே, தேவையேற்படின் தேவைநோக்கி மாணவனை ஆசிரியர் தண்டிக்கும்உரிமை இருக்கவேண்டும், தண்டனை என்னும்போது அதுசரீர தண்டனை என்பது மட்டுமல்ல, இக்கால முறைகளின் பயனுக ஆசிரியர் மாணவர் தொடர்புகுன்ற ஆசிரியர் மாணவர்நல்லுறவும்தடைப்பட்டு மாணவர் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டுவருகிறது.

அரசியல் தலையீடு காரணமாகப் போதனுமொழிப் பிரச்சினை இன்னும் முற்ருகத் தீர்க்கப்பட்டதாகச் சொல்ல முடியாது தாய்மொழி, ஆங்கிலம் என்று கல்விப்பகுதியின் போதனு மொழிமாற்றத்தால் மாணவர் திண்டாடவேண்டியுள்ளது. பத்தாம் வகுப்புவரை சுயமொழியிற் கல்விகற்ற மாணவன் பதிஞேராம் வகுப்பில் ஆங்கிலக் கல்விக்கு மாற்றம் பெறும்போது இடர்ப்பாடடைகிருர். அன்றியும் அரசகருமமொழி என்றபோர்வையிற் சுயபாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் ஆங்கிலம் புறக்கணிக்கப்படுகின்றது. அதனுல் ஆங்கிலத்திலுள்ள எத்தனையோ கல்விக் கருவூலங்களைக் கற்[illegible]வாய்ப்பு நமக்குக் கிட்டு[illegible]வில்லை. அன்றியும் ஆங்கில நூல்களைச் சுயமொழிகளுக்குப் பெயர்க்கும்திட்டமும் மெதுவாகவே செயற்பட்டு வருவதினுல் மாணவர்[illegible]நூல்களுக்குத் திண்டா[illegible]வேண்

யையோ மாணவரது தேர்ச்சித்தரத்தையோ சிறப்புற எதிர்பார்ப்பது எங்ஙனம்?

### சம்பளதிட்டம்

ஆசிரிய சேவை நன்கு அமையவேண்டுமாயின் முதலில் ஆசிரியரது சம்பளத் திட்டம் மாற்றியமைக்கப் படவேண்டும், தன் கல்வித் தகுதியுள்ள ஏனைய ஓர் உத்தியோகத்தன் பெறும் சம்பளம் ஆசிரியன் பெறும் நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே ஆசிரியரும் தம் கடமையைச் சரிவரச் செய்ய முடியும்.

### இடமாற்றம்

ஆயினும் இறுதியாக ஒன்றைக்கூறி இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன் இன்று ஆசிரிய உலகினதும் மாணவரது கல்வித்தரத்தினதும் பெரும்பிரச்சினையாயுள்ளது. ஆசிரியர் இடமாற்றப் பிரச்சினையாகும் இதனை நான் கூறுங்கால் ஏனையோர் எம்மை எள்ளி நகையாடுவர்.

ஆனுல் ஆசிரியரோ வருங்காலச் சமுதாயமான வளரும் பிஞ்சு உள்ளங்களுடன் தொடர்புள்ளவர் அவர்களைப் பகடைக்காய்களென எண்ணி நினைத்தபடி இடம் மாற்றுவதும், எள்ளி நகையாடப்படவேண்டியவை இன்று பெரும்பாலான ஆசிரியர்கள் இடமாற்றம் என்ற பெரும் பூதத்தை எதிர்நோக்கியுள்ளார்களேயன்றித் தமது கடமையைச் செய்யுங் கருத்தோடு இருப்பவர்களாக இல்லை தலைக்கு மேற் கூரிய வாளொன்றைக் கட்டிவிட்டுச் சாந்தமாக இருக்குப்படி சொன்னுல் ஒருவன் எவ்வாறு அமைதியடையாஞே அதேநிலைதான் இன்று ஆசிரிய உலகின்நிலையும் இது சரிவர அமையவேண்டுமாயின் ஒழுங்கான திட்டவட்டமான தொரு இடமாற்றத் திட்டம் வகுக்கப்படவேண்டும் பாடசாலைகளைச் சுவீகரித்து இத்தனை ஆண்டுகளாகியும் அவ்வாருன ஒரு திட்டம் வகுக்கப்படாதது எமது கல்விப்பகுதியின் சேவை நிர்வாகத்தையே சிறப்புறக் காட்டுகிறது. நாடாளுமன்றத்திலும் அரசியல் மேடைகளிலும் பத்திரிகைகளிலும் இதுவிஷயமாக எவ்வளவோ பேசப்பட்டபோதிலும் இன்னும் ஒரு திட்டவட்டமான முடி

# பாரத குடியரசு தினம்

## கோலாகல நிகழ்ச்சிகள்

புதுடில்லி, ஜன. 26

பாரதத்தின் 20 வதுகுடியரசு தினம் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. புதுடில்லியில் இடம்பெற்ற விமரிசையான ஒரு நிகழ்ச்சியை லட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்தார்கள். வானிலைமோசமாக விருந்ததால் விமான அணிவகுப்பில் கலந்து கொள்ளவிருந்த சிலவிமானங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

இரண்டு மணிநேரபவனியொன்றில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

யானைபோன்று அலங்கரிக்கப்பட்டிருந்த இரண்டு ஹெலிகொப்டர்கள் நாட்டிய மாடுவது போல் மேலே எழுந்து சாகசம் புரிந்தன. வேறுபல ஹெலிகொப்டர்களும் வழிநெடுகமலர்களைத் தூவி ஜனுதிபதியைவரவேற்றன. நேர்த்தியான உடையணிந்த மெய்க்காவலர்கள் உடன்வரக்கம்பீரமாக ராஷ்டிரபதி மேடைக்கு வந்தார். அவரை பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும் இதரத்தலைவர்களும் வரவேற்ருர்கள். உபராஷ்டிரபதியும் முப்படை தளபதிகளும் அங்கிருந்தார்கள் தேசியகீதம் ஒலிக்கப்பட்ட பின்னர் 31 பீரங்கிகள் தீர்க்கப்பட்டன. அதன்பின் ஜனுதிபதி வீரப்பதங்கங்களையும்விருதுகளையும் வழங்கினுர். மீசோப்படையினருடன் நடந்த சண்டையில் தீரச்செயல் புரிந்த ஒரு ஜவானுக்குஜனுதிபதி அசோகச்சக்கரத்தைச் சூட்டினுர். ராணுவகடற்படை விமான படை அணிவகுப்பு மரியாதைகளை ராஷ்டிரபதி ஏற்றுக் கொண்டார்.

விமானப்படை அணிவகுப்பில் காற்றைவிட வேகமாகச் செல்லும் விமானங்கள் இடம்பெற்றன. இராணுவ அணிவகுப்பில் நிலத்திலிருந்து விண்நோக்கிச் செலுத்தப்படும் ஏவுகணைகள் இடம்பெற்றன. கடற்படை அணிவகுப்பில் இந்திய கப்பல்படையில் பிரமாண்டமான சண்டைகப்பலான விக்கிராந்தின் மாதிரியொன்று இடம்பெற்றது.

வீரத்துகான தேசியவிருது பெற்ற சிறுவர் சிறுமிகள் யானைகள் மீதுபவனி வந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக விருந்தது.

## உள்ளூராட்சி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 1-30 யாழ்ப்பாண அரச மாளிகைக்குப் புறப்படல், 2-00 யாழ்ப்பாண அரசமாளிகைக்கு வந்துசேர்தல், 2-30 கொக்குவிலுக்குப் புறப்படல் 2-45 கொக்குவில் கிராமசபைத் தலைவரையும் உறுப்பினர்களையும் சந்தித்தல், 3-00 நவரத்தினராசா வீதியைத் திறந்து வைத்தல் 3-30 நல்லூருக்குப் புறப்படல், 3-45 நல்லூர் கிராமசபைத்தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு, 4-30 மல்லாகத்துக்குப் புறப்படல் 5-00 மல்லாகம் கிராமசபைப் பிரதேசத்தின் சிரமதான வேலைகளைப் பார்வையிடல் 5-45 தெல்லிப்பழைக்குப் புறப்படல் 5-45 தெல்லிப்பளை கிராமசபையின் மத்தியநூல்நிலயத்தை திறந்து வைத்தல் பன்னுலை கணேச சனசமூகநிலைய கட்டிடத்தை திறந்து வைத்தல் 6-15ஏழாலைக்குபுறப்படல்6 30ஏழாலை கிராமசபை புதிய அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தல் 8-00 ஏழாலைக் கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக் வராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு, 4-45 வட்டுக்கோட்டைக்குப் புறப்படல் 5-00 வட்டுககோட்டை கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிககப்படும் தேநீர் விருந்து 5-45 காங்கேசன்துறைககுப் புறப்படல், 6-15 காங்கேசன்துறை அதிதி மனையில் யாழ்ப்பாண உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய பொறியியலாளர் பணியாளர் ஆகியோரைச் சந்தித்தல். இரவு 7-00 காங்கேசன்துறை அதிதி மனையில் இருந்து புறப்படல், 7-20 பலாலி விமானநிலையத்துககு வந்து சேர்தல் 7-30 இலங்கை அரசவிமானப் படை விமானத்தில் கொழும்புககுப் புறப்படல்.

## வடமராட்சியில் சுதந்திரவிழா

புலோலி, திங்கள்

அடுத்தமாதம் 4-ம் திகதி வடமராட்சியில் சுதந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யருக்கு வீடுகள் வழங்கு வதற்குத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்திருக்கிருராம். சிங்களத்தில் மூன்றுந் தரத் தேர்ச்சிபெற்ற அரசாங்க ஊழியருக்கு ஆகக்கூடிய புள்ளிகள் அதாவது 30 புள்ளிகள் இடைக்குமாம்.

இந்த நிபந்தனையின்படி பார்த்தால் சிங்களத்தில் தேர்ச்சிபெருத அரசாங்க ஊழியருக்கும் சிங்களத் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து அரசாங்கம் விலக்களித்த 1956-ம் ஆண்டுக்கு முன் அரசாங்கசேவையில் ... தென்ற நிபந்தனை அரசாங்க ஊழியர்களுக்குள் புதியதொரு வர்க்கத்தைச் சிருஷ்டிப்பதுடன் அவர்களுக்குள் பாகுபாட்டையும் வளர்க்க உதவுவதுடன் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டும் அரசாங்கத்தின் கொள்கையையும் சீர்குலைத்து, அரசாங்கத்தைப்பற்றி அரசாங்க ஊழியர் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் தவருன அபிப்பிராயத்தை உருவாக்கி அதிருப்தியை ஏற்படுத்துவதாகும்.

# பத்மாவதி அம்மாளின் கன்னிப் பேச்சு

சென்னை, ஜன. 26

தமிழ்நாடு முன்னுள் விவசாய அமைச்சர் காலஞ்சென்ற திரு. கோவிந்தசுவாமியின் துணைவியார் தமிழ்நாடுகீழ்சட்டசபையில் தமது கன்னிப்பேச்சை நிகழ்த்தினுர். முகையூர் தொகுதியில் அவர் வெற்றிபெற்றது குறித்து திருமதி பத்மாவதி அம்மாள் கூறியதாவது:

காங்கிரஸ் சார்பாக மிகப்பெரும் பேச்சாளர் திருக்குறள் முனுசாமி அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும், காமராஜர். கக்கன் போன்றவர்கள் அதிதீவிர பிரசாரம் செய்தும் எனது கணவரைவிட 2 மடங்கு ஒட்டு அதிக வித்தியாசத்தில் என்னை வெற்றிஅடையச் செய்த எனது முகையூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

எனது கணவர் அமைச்சராக இருந்து தமிழகத்திற்கு தொண்டுசெய்து வந்த அதே நேரத்தில், எனது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எல்லா கிராமங்களுககும் மினசார விசை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

சாலைகள் அமைத்தும், தொகுதி முழுவதும் மிகக் குறைந்த காலத்தில் பல நன்மைகள் செய்துள்ளார்கள். இதனை நான் ஒட்டு சேகரிக்கச்சென்றபோது மக்களே கூறினுர்கள். அதற்காகஇந்த அரசுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும் நான் சார்ந்துள்ள சமூகம் பின்தங்கிய சமூகம் ஆகும். பொருளாதாரத் துறையில் பின்தங்கிய இந்த வகுப்பினர் மேம்பாட்டிற்கு இந்த அரசு ஒரு தனிக்குழு அமைத்துஇருப்பது பாராட்டத்தக்கதாகும்.

எங்கள்சமூக மாணவர்கள் உதவிச் சம்பளம்பெற 50 மார்க்குகளில் இருந்து 40 மார்க்காக குறைத்து இருக்கிருர்கள். இதனுல் நிதி ஒதுக்கம் 213 லட்சமாக இருந்தும் நமதுஅரசு ஏற்றுக்கொண்டது குறித்து நான் பெருமைப்படுகிறேன். பாராட்டுகிறேன்.

— —

## மயிலிட்டி கி. ச. பகிஷ்கரிக்கும்?

மாவிட்டபுரம், திங்கள்

இம்மாதம் 29-ம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்யும் உள்ளூர் ஆட்சி அமைச்சரின் விஜயத்தை மயிலிட்டிக் கிராமசபை பகிஷ்கரிக்க விருப்பதாகத்தெரிகிறது.

உள்ளூர் ஆட்சி அமைச்சரின் விஜயம் சம்பந்தமாகத் தமக்கு அறிவித்தல் எதுவும் அனுப்பபடவில்லை எனவும் அதனுல் தாம் அமைச்சர் விஜயத்தைப் பகிஷ்கரிக்க இருப்பதாகவும் மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. கு. தி. இராசதுரை உள்ளூர் ஆட்சி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

## எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

யு.என்.பி. தலைமை அலுவலகமான ஸ்ரீ கொத்தாவில் நடந்த கமிட்டி கூட்டத்தில் எம்.பிக்களுக்கு கார்கொடுப்பதற்கு சங்கத்தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எம்பிக்கள் அல்லாத அங்கத்தவர்களும். மந்திரிகள் சிலரும் எதிர்த்தனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 27-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

... விட்டால் அது பிரஜைகளின் தவறல்ல அது குருபீடத்தின் தவறென்றே சொல்லவேண்டும்.

இன்று கல்வியின் தரம் மிகக்குறைந்துவருகின்றது என்பதை நாம் நன்குணர்கிரேம். இதற்கு ஆசிரியர்களே காரணகர்த்தாக்கள் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. இது பொருத்தமான கூற்றன்று. மேற்கூறப்பட்ட இக்கூற்றுக்களுடன் தொடர்பாகச் சில குறிப்புக்களை இக்கட்டுரையிற் காட்டுவதே என் நோக்கமாகும்.

நாளடைவில் கல்விமுறைகள் மாற்றம்பெற்றன. கல்வி கற்பதன் குறிக்கோள் மாறியது. அந்நியராட்சிக் காலத்தில் அரசாங்க உத்தியோகத்தை நம்பி ஆரம்பித்த கல்வி இன்னும் அதே அத்திபாரத்திலேயேஇயங்கி வருகின்றது. கல்லூரிக்கோ பாடசாலைக்கோ வரும் மாணவனது பெற்ருேர் தம் பிள்ளையைக் கல்வி முடிந்ததும் ஏதோ ஒரு வேலைக்குத் தயார்படுத்தவே பெரிதும் விழைகின்றனர். இதன் காரணமாக இக்காலக் கல்வி ... ஏற்பட்டபின் மாண...ர் தங்குதடையின்றி வகுப்பேற்றம் பெற்றுக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பிற்கு வந்து சேர்ந்து ...டுகின்றனர். இவ் வகுப்பி...யே மாணவர் ஒரு பரீட்சைக்குத் தேற்றவேன்டியவராகின்றனர். இதனுல் அவர்களது கல்வித்தரம் குறைய ஏதுவாயுள்ளது.

### கல்வித் திட்டம்

பாடசாலைகளின் கல்விக்குரிய திட்டங்களை வகுக்கும் பொறுப்பு கல்விப் பகுதினர்க்கே உரியது வளர்ந்து வரும் சமுதாயத்துக்கேற்ற, நாகரீக விருத்திக்கேற்ற, நாட்டின் தேவைக்கேற்ற கல்வித்திட்டங்கள் 1941ம் ஆண்டின்பின் எத்தனைமுறை வகுக்கப்பட்டுள்ளன. பொருத்தமான பாடத்திட்டமின்றி மாணவர்க்கு கல்வி புகட்டுவது எவ்வாறு? அத்தோடு ஒன்றுக்குமேற்பட்ட பல ஆசிரியர்கள் பல பாடங்கட்குத் தொடர்புகொள்கின்றனர். வருடாவருடம் வகுப்பு மாற்றத்துடன் ஆசிரியர் மாற்றமும் இடம்பெறுகிறது. நவீன முறைகளின் ...ப்பு நமக்குக் கிட்டு...ல்லை. அன்றியும் ஆங்கில நூல்களைச் சுயமொழிகளுக்குப் பெயர்க்கும்திட்டமும் மெதுவாகவே செயற்பட்டு வருவதினுல் மாணவர்...நூல்களுக்குத் திண்டா...வேண்டியவராகின்றனர்.

இன்று கல்விப்பகுதி பாடசாலை நாட்களைக் கூட்டுவதற்கு முயற்சி எடுத்துவருகின்றது. 180ஆக இருந்த பாடசாலை நாட்கள் இன்று 206 ஆக அதிகரிக்கப்பட்டு விட்டன. இன்னும் போயா முன் தினங்களையும் பாடசாலை நாட்களாக்கிப் புறக்கிரியைகள், சிரமதானமுயற்சிகளில் ஈடுபடுத்தலாம் என்னும் எண்ணமும் இருப்பதாகத் தெரிகிறது உளநூல் வல்லுனர்களது அபிப்பிராயப்படி கல்விக்குரிய பிஞ்சு உள்ளங்கட்கு ஓய்வு தேவை என்ற கொள்கைப்படியே 108நாள் திட்டம் அமைக்கப்பட்டது. ஆனல் துரதிஷ்டவசமாக வேலைநாட்களைக் கூட்டுவதனுல் மாணவரின் தேர்ச்சித் தரம் கூடும் என்று உயர் கல்வி அதிகாரிகள் எண்ணத் தலைப்பட்டனர். அதனுல் கிடைத்தபெறுபேறு 'மாட்டு வால்தான்' என்பது கண்கூடு.

''ஆசிரியன் பிறக்கிருன்; ஆசிரியன் தயாரிக்கப்படுவதில்லை'' என்பது கல்வி நூல் வல்லார் கண்டமுடிவு. ஆனுல், இன்று ஆசிரிய உலகத்தை எடுத்துப்பார்ப்போம். எத்தனை தரமான ஆசிரியர்கள் ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டு வேறு வேறு தொழில்களை நாடி ஓடிவிட்டார்கள். காரணம் அவ்விடங்களிற் கிடைக்கும் உயர்ந்தவேதனமும் வேலை உயர்ச்சிகளுமே. ஆசிரியர்கட்குக் கிடைக்கும் உயர்ச்சிகளைக் கவனித்தால் ஆகக் கிடைப்பது 1ஆம், 2ஆம், 3ஆம் தரத் தலைவர்களே- விசேட நியமனங்களோ உத்தியோகத்தராக உயர்ச்சி பெறுவதோ அரிதாய்விட்டது 1ஆம், 2ஆம், 3ஆம் தரத் தலைவர்கள் நியமனங்கள்கூட, சேவைமூப்பு அடிப்படையிலோ தகுதியடைப்படையிலோ நடந்துள்ளனவாகச் சொல்லப்படமுடியுமா?

ஆசிரியர்கட்குக் கிடைக்கும் குறைந்த சம்பளம், ஆகக் குறைந்த படியேற்றம் என்பவற்றைக் கொண்டு ஆசிரியத் தொழிலுக்கு வருவோர் அலைந்தலைந்து பல முயற்சிகளிலீடுபட்டு வேறு வேலைவாய்ப்புகள் கிடைக்காதபோது ஏதோ ஆசிரியத் தொழிலையாவது செய்வோம் என்ற விரக்தி மனப்பான்மையில் வருபவர்களே பெரும்பாலோர் அப்படிப் பட்டநிலையில்தகுந்த சேவையைத் ... பெறப்புறக் காட்டுகிறது. நாடாளுமன்றத்திலும் அரசியல் மேடைகளிலும் பத்திரிகைகளிலும் இதுவிஷயமாக எவ்வளவோ பேசப்பட்டபோதிலும் இன்னும் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு நாம் வந்தபாடில்லை. ஆசிரியர் இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட காலியிடங்கள் உடனுக்குடன் சரிவர நிரப்பப்படுவதில்லை. அதனுல் நேரசூசியமைப்பு தாமதப்பட்ட வேலை தேங்கி மாணவர் கல்வித்தரம் குறைவதற்கு ஏதுவாகின்றது. அதைவிட 1960 ஆம் ஆண்டின்பின் ஆசிரியர் நியமனங்கூட சீரான அடிப்படையில் நடைபெறவில்லை. பெருகிவரும் சனத்தொகைக்கேற்பவும் இறந்த இளைப்பாறிய ஆசிரியர் தொகைக்குச்சமமாகவும் ஆசிரியர் நியமனங்கள வழங்கப்பட்டிருப்பின் இன்று அகில இலங்கையிலும் ஆசிரியர் பற்ருககுறை ஏற்படடிருகக முடியாது,

நாட்டின்நலங்கருதி வருங்காலச் சமுதாயமே நாட்டின் சீவநாடி என்பதனைக் கருதி அரசியலாரும் கல்விமான்களும் பொதுமககளும் இவ்விஷயங்களிற் கூடிய கவனஞ் செலுத்துவரென்று நாம் நம்பவேண்டியவர்களாகஇருககிருேம்.

வளர்க தமிழ் சிங்கள ஆசிரியர் ஒற்றுமை

# உயிர் வதை செய்த வழக்கில் எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, செவ்.

கடலாமைகளுக்கு உயிர் வதை செய்ததாக குற்றஞ் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி பதில் மாஜிதிரேட் திரு கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த அகஸ்டின், காணிக்கைராஜா, சின்னையா ஆகியோர் புத்தளம் கற்பிட்டி பகுதியிலிருந்து 69 கடலாமைகளை லொறியில் புரட்டிக் கட்டிப் போட்டு உயிர்வதை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. அட்வகேட் எம். மோதிலால் நேருவின் உதவியுடனும், புறக்டர்களான ஏ. அன்ரனி எஸ். பி மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

இவ்வழக்கை ஆனையிறவு தடுப்புமுகாம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அங்குஞவலை தாக்கல் செய்திருந்தார்.

# தொலைபேசித்தாமதத்தினுல் கடத்தல்பொருட்கள் தப்பின?

பச்சிலைப்பள்ளி, திங்கள்

கடந்த புதன்கிழமை நாகர் கோவில் கடற்கரையில் நடைபெற்ற கள்ளக் கடத்தல் சம்பந்தமாக நாகர்கோவில் தபாற்கந்தோரிலிருந்து பளைபொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்க நாகர் கோவில் கிராமசேவையாளர் தொலைபேசித் தொடர்பு கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்காததினுல் சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான கடத்தல் பொருட்கள் கடத்திச் செல்லப்பட்டு விட்டதாக தெரியவருகிறது. 2 மணி நேர தாமதம் இருந்ததே இதற்குக் காரணமென கூறப்படுகிறது. பருத்தித்துறைப் பொலிஸார் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் பயனற்றதாகி விட்டதாம்

இப் பகுதியிலிருந்து தொலைபேசித் தொடர்பு கொள்வதில் அதிகதாமதம் இருந்து வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

0 0 0

திருக்கோணமலை, திங்கள்

சேருவிலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் காரியாதிகாரி பிரிவு அடுத்தமாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது.

... திறந்து வைத்தல் 6-15ஏழாலைக்குப் புறப்படல் 6 30ஏழாலை கிராமசபை புதிய அலுவலக கட்டடத்தை திறந்து வைத்தல் 8-00 ஏழாலைக் கிராமசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் இராப்போசன விருந்து இரவு 9-30 காங்கேசன்துறைக்கு புறப்படல். இரவு காங்கேசன்துறை அதிதிமனையில் தங்குவார். பெப்ரவரி-1 காலை 8-00 காங்கேசன் துறை அதிதிமனையில் இருந்து புறப்படல். 8-30அச்சுவேலிக்கு வந்து சேர்தல் அச்சுவேலி வீடமைப்புத்திட்ட 2-ம் கட்டடத்தைப் பார்வையிடல் 9-00 அச்சுவேலி கிராமசபையின் புதிய அலுவலகக் கட்டடத்தை திறந்துவைத்தல். 9 30 வல்வெட்டித்துறைக்கு புறப்படல்.10-00 வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு, 10-45 பருத்தித்துறைக்கு புறப்படல் 11-00 பருத்தித்துறை நகரசபைத் தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேறபு நண்பகல்12-00வாடி வீட்டில் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர்களாலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் மதியபோசன விருந்து. பிற்பகல் 2-30 சங்கானைக்குப் புறப்படல் 3-00 சங்கானைப் பட்டினசபை தலைவராலும் உறுப்பினர்களாலும் அளிக்கப்படும் வரவேற்பு. 4-00 அராலிக்கு புறப்படல், 4-20 அராலிக் கிராமசபைத் தலை...

## வடமராட்சியில் சுதந்திரவிழா

புலோலி, திங்கள்

அடுத்தமாதம் 4-ம் திகதி வடமராட்சியில் சுதந்திர தின விழாவை விமரிசையாகக்கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனையொட்டி நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வடமராட்சி விளையாட்டு அதிகாரியான திரு. எஸ். கிருஷ்ணதாஸ்...ம்பியும் வடமராட்சி காரியாதிகாரியான திரு. எஸ். ஜெயகாந்தனும் கவனித்துவருகிருர்கள். பல்வேறு விளையாட்டுக்களும் இடம்பெறும் இப்போட்டிகளும் அம்பன் கிராம முன்னேற்றச்சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வடமராட்சியில் சுதந்திர தின விழாவைக்கொண்டாடுவது பற்றி பருத்தித்துறைக் காரியாதிகாரி அலுவலகத்தில் காரியாதிகாரி தலைமையில் கூடி ஆராயப்பட்டது. மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

விளையாட்டுக் கழகங்களிடமிருந்து இம்மாதம் 28-ம் திகதிவரை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கயிறு இழுத்தல் போட்டி. மரதன் ஓட்டப்போட்டி. கரப்பந்தாட்டம், காவடி. விநோத உடைப்போட்டி முதலியன நடைபெற்றபின் மாலையில் நாடகங்களும் நடைபெற இருகின்றன.

# ஆட்சிமன்ற உறுப்பினர் தொகை அதிகரிக்கப்படலாம்

## ரூபா $4\frac{1}{2}$ கோடி செலவில் கட்டிடம் அமைக்கத் திட்டம்

கொழும்பு, திங்கள்

300 அங்கத்தவர்கள் இருக்கக்கூடிய வசதிகளுடன் புதிய ஆட்சிமன்றக் கட்டிடம் நிறுவப்படவுள்ளது. தற்போதுள்ள ஆட்சிமன்றக் கட்டிடத்தில் 157 உறுப்பினர்களுக்கு மட்டுமே வசதியுள்ளது.

சுமார் நாலரை கோடி ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் ஆட்சிமன்றக் கட்டிடம் 7 மாடிகளைக் கொண்டதாக இருக்கும்.

இக்கட்டிடம் முன்னைய கண்டிய மன்னரின் மகுடம்கமிஷனிடம் போன்ற அமைப்பைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்டிடக் கலைத்திணைக்களம் தனது பூர்வாங்க வரைப் படத்தை மகுடம் போன்ற அமைப்பில் வரைந்துளளது

கூடியபட்சம் 200 அங்கத்தவர்களைக் கொண்டதாக ஆட்சிமன்றத் தொகுதிகள பிரிக்கப்படவேண்டும் என்ற ஆலோசனையை ஆட்சிமன்ற உறுப்பினர் குழு ஒன்று எல்லை நிர்ணயக் ... சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ஆட்சிமன்றத் தொகுதி எல்லை நிர்ணய விசாரணைக்குழுவின் விசாரணைகள 71-ம் ஆண்டு இறுதிப் பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

75 ஆயிரம் ஜனத்தொகையை உடைய தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் இக்குழு கேட்கவுளளது.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org